இலையுதிர் மலர்

அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 / புரட்டாசி / செப்டம்பர் 2023

உள்ளே

நன்றி மடல்	11
தமிழ் வானம் - மகாகவி ஈரோடு தமிழன்பன்	14
பேரவையின் அன்புடை நெஞ்சம்	15
36வது பேரவைவிழா வாழ்த்துரை - கு.வெ.பாலசுப்ரமணியன்	17
அமெரிக்கத் தமிழர்களின் இன, மொழிப்பற்று - எழுத்தாளர் இமையம்	20
FeTNA Convention and beyond - Mr. Karthikeya Sivasenapathy	23
வேண்டாமை வேண்டுதல்! - கவிஞர் ஆரூர் தமிழ்நாடன்	24
36வது பேரவை விழாவில் ஜெபர்டி நிகழ்ச்சி	27
தரணியெங்கும் பரவும் தமிழர் மருத்துவம்	31
37வது பேரவை விழா	34
கலைச்சொற்களின் செந்தரம்	36
கல்லிலே கலைவண்ணம்	38
உலகத் தமிழர் நேரம்	44
மௌனம் களைவோம்	46
அமெரிக்கத் தமிழர் முன்னோடி விருதுகள் 2023	47
முல்லைப்பாட்டும் மனித வாழ்வும்	48
கலகலப்பாய் ஓர் கருத்துக்களம்	51
நாளைய தமிழ் இலக்கியம் நானிலத்தில் - இலக்கியக் கருத்தரங்கம்	56
தமிழும்! நாமும்!	62
எதிரொலி	63
வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் - பகுதி 3	69

36வது பேரவை விழா நினைவலைகள்

அருவி மலர்க் குழு

இரம்யா ரவீந்திரன்
ஆசிரியர்
சார்லட், NC

ஷீலா ரமணன்
இணையாசிரியர்
சான் அன்டோனியா,TX

உமா ராம்குமார்
இணையாசிரியர்
நியூயார்க், NY

இந்து ராவ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

பிரதிபா பிரேம்குமார்
துணையாசிரியர்
அட்லாண்டா, GA

விஜயகுமார் தேவராஜ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

ஜேசு சுந்தரமாறன்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

இளங்கோவன் சந்தானம்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

செந்தில் முருகன் வேலுசாமி
துணையாசிரியர்
வாசிங்டன், D.C

இராம்துரை பாலசுப்ரமணியன்
துணையாசிரியர்
நோவி, MI

மீனா சுந்தர்
ஆலோசகர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

இளங்கோவன் தங்கவேலு
ஆலோசகர்
செயின்ட் லூயிஸ், MO

பேரவைத் தலைவர் மடல்

அமுதே தமிழே, அழகிய மொழியே.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் உறுப்பினர் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு என் வணக்கம். பேரவையின் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மற்றும் கொடையாளர்களுடன் அருவி இதழ் வாயிலாக மீண்டும் உரையாடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

முதலில் அனைவர்க்கும் 'தமிழ்நாடு நாள்' நல்வாழ்த்துகள். சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு எனப் பெயரிடக் கோரி தனி ஒருவராக சங்கரலிங்கனார் 76 நாட்கள் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு தனது இன்னுயிரை ஈந்தார். சென்னை மாநிலத்தின் முதல்வராக அறிஞர் அண்ணா பொறுப்பேற்ற பிறகு 18 சூலை 1968-இல் சென்னை மாநிலம் என்ற பெயரை 'தமிழ்நாடு' என மாற்றிட சென்னை மாநில சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

பேரவையின் 36-ஆவது ஆண்டு விழா சாக்ரமெண்டோவில் யூன் 30, யூலை 1, 2 திகதிகளில் கோலாகலமாக நடந்து முடிந்தது.

"விழாவிற்கு வந்திருந்த ஒவ்வொருவருடைய மனதிலும், பேச்சிலும், செயலிலும் தமிழ் மொழியை, அதன் இலக்கியப் பெருமையை, பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாப்பது, அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவது மட்டுமே இலட்சியம் என்பது தெளிவாகவே வெளிப்பட்டது." என்று பதிவிட்ட சாகித்திய அகாதமி விருது வென்ற எழுத்தாளர் இமையம் அவர்களுக்கு நன்றி.

பேரவை விழாவில் உலகத் தமிழ் பீட விருதினை ஏற்றுக்கொண்ட முதுமுனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள் விழா பற்றி ஓர் அகவல் பா எழுதி அனுப்பியிருக்கிறார். இது, விழா ஒருங்கிணைப்பாளர்கள் ஜான் பிரிட்டோ, மலர் அகிலன் மற்றும் விழாவின் நிகழ்த்துக் குழுவினர் அனைவர்க்கும், குறிப்பாக செயலாளர் கிங்ஸ்லி சாமுவேல் மற்றும் பேரவைக் குழுவினர் செய்த பணிகளுக்குக் கிடைத்த பாராட்டு. இவ்விழாவின் குழுக்களில் தானாக முன்வந்து உவப்புடன் பணியாற்றியவர்கள் பலர். நியூயார்க்கிற்கும் சாக்ரமெண்டோவிற்கும் மூன்று மணி நேரம் கால இடைவெளி இருந்தாலும், எப்போது வேண்டுமானலும் அவர்களை அழைத்துப் பேசி விழா ஏற்பாடுகள் குறித்துஉரையாடும் உரிமையை அவர்கள் எனக்கு அளித்திருந்தார்கள். தமிழுக்காகத் திரைமறைவில் பலர் உழைப்பது நமக்குத் தெரிந்தது தான். தமிழ்ப் பற்று என்பது பல பரிமாணங்களில் ஒவ்வொருவரையும் தமிழுக்குத் தொண்டு செய்ய அழைத்து வந்துவிடும்! இப்போது சாக்ரமெண்டோ விழா தன்னார்வலர்களில் பலரை என் நண்பர்கள் என்று உரக்கச் சொல்வதில் எனக்குப் பெருமை.

சில மாதங்களாக இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் வன்முறை கண்டு, ஈழத்தில் இன அழிப்பு நடப்பதைக் கண்ணுற்ற தமிழர்கள் போன்று, தமிழர்கள் அனைவரும் பெரும் துயரத்தில் இருப்பதை நான் உணர்கிறேன். இந்தக் கலவரத்தை ஒட்டி இதுவரை வன்முறையை ஒடுக்கும் வண்ணம் எந்தக் கருத்தையும் கூறாமல், அந்த மக்களைச் சென்று பார்க்காமல், அமெரிக்கா மற்றும் பல நாடுகளுக்குப் பயணம் செய்து கொண்டும், பாராளுமன்றத்துக்கே வருவதற்குத் தயங்கிக் கொண்டும் இருக்கிறார் மாண்புமிகு இந்தியப் பிரதமர் மோடி. இந்தக் கலவரத்தைப் பற்றி முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி சசிகாந்த் அவர்கள் கூறுகிறார், “மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் இன்று வரை வெளியில் வராமல் இருக்கிறது. அங்கு ஓர் இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. மதவாத அரசியல் நடந்தால் என்ன நடக்கும் என்பதற்கு மணிப்பூர் கலவரம் ஒரு முன்னுதாரணம். குக்கி நாகா இன மக்கள் கிருத்துவர்கள் என்பதனால் இதுவரையில் 200-க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன.” சொந்த மண்ணை விட்டுவிட்டு பல நூறு கிராமத்தினர் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டிருப்பதை ஈழப் போர்க் காலத்தில் கண்டு பதறியவர்கள் தானே நாம். இப்போது இந்தியாவில் குக்கி இன மக்கள் மீது காடையர்கள் வன்முறையை நாடொறும் கட்டவிழ்த்து விடும் இவ்வேளையில், பாதிக்கப்பட்டவர்களுக்குக் குரல் கொடுப்பது நம் கடமை. இந்தியக் குடியரசுத் தலைவர் தானாக முன்வந்து இதற்கு துரிதத் தீர்வு காண வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் தேதி முதல் சில வார காலத்திற்கு இலங்கையின் பல பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. திட்டமிட்ட வகையில் தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் ஆரம்பமாக இந்த கருப்பு யூலை வன்முறைகளை நோக்கலாம். கொழும்பு மற்றும் தென் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள், சொத்துக்கள் என அனைத்தையும் அழிக்கும் செயற்பாடாக இந்த வன்முறைச் சம்பவம் பதிவாகியிருந்தது. இந்த ஆண்டு கருப்பு யூலை (7/23) அன்று 40 ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்தவர்களுக்கு உலகெங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. வட அமெரிக்காவில் ஆறு அமைப்புகள் நடத்திய 40-ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் பேரவையும் கலந்துகொண்டது. ஈழத்திலும் இலங்கையின் மலையகத் தமிழர் பகுதிகளிலும் கொழும்பு நகரிலும் கருப்பு யூலை அஞ்சலி நிகழ்வுகள் பரவலாக நடத்தப்பட்டன. அஞ்சலி செலுத்திய தமிழர்கள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்தியிருப்பதாகச் செய்திகள் கேட்டு மனம் பதைக்கிறது. நண்பர்களே, இன்று நீதிகேட்கும் தமிழர்கள் மீது அடாவடி செய்யும் இலங்கை அரசு அன்று எந்த அளவிற்குக் கொலைவெறித் தாண்டவம் ஆடி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஈழத் தமிழர்கள் நம் சொந்தங்கள், அவர்கள் பக்கம் உறுதியோடு பேரவை என்றும் இருக்கும்; நீங்களும் இருக்கவேண்டும். அது மட்டுமின்றி உங்கள் நட்பு வட்டாரத்திலும் ஊடகங்களிலும் ஈழத் தமிழர்க்கு ஆதரவாக வெளிப்படையாகப் பேசுங்கள் மற்றும் கருத்துக்களைப் பகிருங்கள்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடி ஸ்டெரிலைட் எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க அன்றைய அரசு துப்பாக்கி சூடு நடத்தியதும் அதன் விளைவாகப் பலத் தமிழர்கள் கொல்லப்பட்டதும் உங்களுக்கு நினைவில் இருக்கும். அதனை அடுத்து கனடாவிலிருந்து தமிழ்நாடு வந்திருந்த செல்வி சோபியா "பாசிச பாஜக ஆட்சி ஒழிக" என்ற நான்கு சொற்களை மரு. தமிழிசை சௌந்தரராசன் அவர்களின் செவிகளில் கேட்கும்படி ஒருமுறை கூறினார் என்பதற்காக அவர் மீது போடப்பட்ட முதல் தகவல் அறிக்கை (FIR)

மற்றும் குற்றப்பத்திரிக்கையை கிழிமுறித்து (இரத்து செய்து) சென்னை உயர்நீதிமன்றம் (மதுரைக் கிளை) தீர்ப்பு அளித்துள்ளதை வரவேற்கிறேன். பேச்சுச் சுதந்திரம் என்பதே மக்களாட்சியின் அடித்தளம். "பெரிய அளவில் அரசியல் நெருக்கடி மற்றும் துன்புறுத்தல்களிடமிருந்து இருந்து நான் தப்பிக்க மிக முக்கியக் காரணம் சில அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொது வாழ்வில் உள்ள முற்போக்குவாதிகள், மற்றும் பெருவாரியான பொதுமக்கள் அனைவரின் துரிதமான அளவுக்கதிகமான ஆதரவே. நன்றி!" என்று செல்வி சோபியா நெகிழ்ச்சியுடன் தெரிவித்திருப்பதும் நோக்கத்தக்கது. நாம் அனைவரும் அரசியல் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்குத் துணையாக ஒற்றுமையாகவும் உறுதியாகவும் நிற்க வேண்டும். இதனால் ஓர் அப்பாவிப் பெண், ஒரு குடும்பம், ஓர் இனம், ஏன் மக்களாட்சித் தத்துவமே புத்துணர்வு பெறலாம்.

சில நாட்களுக்கு முன், இளநிலை மருத்துவம் பயில நீட் தேர்வு எழுதி, அதிக மதிப்பெண் பெற்று கல்லூரியில் சேர்ந்துவிட்ட மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஆளுநர் மாளிகைக்கு அழைத்து கூட்டம் நடத்தி இருக்கிறார் மாண்புமிகு ஆளுநர் திரு ஆர். என். இரவி. இதன்படி ஆகத்து 12, 2023 அன்று நடந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்களில் ஒருவர் நீட் தேர்வு எழுதுவது தொடர்பான இடுக்கண்களைத் தெரிவித்து, அதற்காகப் பல இலக்கம் உரூபாய் செலவழிக்கும் கட்டாயம் ஏற்படுவதையும் அனுபவரீதியாக எடுத்துக் கூறி, “நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கான கோரிக்கை சட்ட மசோதா 2021 செப்டம்பர் மாதமே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியிருக்கிறார். இதற்குத் தாங்கள் எப்போது ஒப்புதல் அளிப்பீர்கள்?” என வினா எழுப்பியுள்ளார். இந்தக் கேள்விக்கு முறையாக பதில் அளிக்காத ஆளுநர், ‘நீட்’ தேர்வில் இருந்து விலக்கு கோரும் தமிழ்நாடு அரசின் தீர்மானத்திற்கு நான் ஒரு போதும் ஆதரித்துக் கையெழுத்து போட மாட்டேன்” என்று பேசியிருப்பது வருத்தமளிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கும், சட்டமன்ற மாண்புகளுக்கும், அரசியலமைப்பிற்கும் எதிராக மீண்டும் மீண்டும் செயல்படுவதை தமிழ்நாட்டின் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சொந்தங்களே! சாக்ரமெண்டோ நகரில் நடந்த பேரவை விழாவிற்கு வந்திருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் பேரவை விழாவிற்கு முதன் முறையாக வந்திருந்தார்கள் என்பது சாக்ரமண்டோ தமிழ் மன்றம் மற்றும் இன்றைய பேரவை செயற்குழுவின் அயராத உழைப்பிற்குக் கிடைத்த பெரும் வெற்றி. அடுத்த ஆண்டு டெக்சாசு மாகாணத்தின் சான் ஆண்டோனியோ மாநகரில் நடக்கும் 37-ஆவது பேரவை விழாவில் உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

அன்புடன்

முனைவர் பாலா சுவாமிநாதன்

தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

நியூயார்க்

செயலாளர் கடிதம்

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றது.

அருவி இதழ் காலாண்டுக்கு ஒரு முறை உங்களுடன் இந்த ஊடக வழியில் தகவல் பரிமாற கொடுக்கும் இந்த வாய்ப்பிற்கு என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வட அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு தமிழ்ச் சங்கத்திலும் ஒவ்வொரு ஆண்டும் பல புதிய உறுப்பினர்கள் இணைந்து வருகின்றனர். சிலர் இந்தியாவிலிருந்து புதிதாக வட அமெரிக்காவிற்கு வந்தவராகவும், மேலும் சிலர் தமிழ்ச்சங்கப் பணிகளைப் பற்றி தெரிந்து கொண்டு அதில் உறுப்பினராக இணைபவராகவும் உள்ளனர். இவர்கள் மட்டுமல்லாமல் அந்தந்த வட்டாரங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் தொடர் ஆதரவாளர்களும் பலர் உள்ளனர். உங்கள் அனைவரின் தொடர் பங்களிப்பு மற்றும் பங்கேற்பினால் தமிழ்ச் சங்கங்கள் வளர்ந்து வருகின்றன. தமிழ் சங்கங்களின் வளர்ச்சி வட அமெரிக்காவில் நம் தமிழ் மக்களுக்கு பல பயன்களை அளிக்கும். மேலும் வட அமெரிக்காவில் தமிழ் என்ற ஒற்றைப் புள்ளியில் நம் அனைவரையும் இணைத்து, தமிழர் என்ற அடையாளத்தை உறுதியாக நிறுவ உதவும். எனவே உங்களுடைய தொடர் ஆதரவை தமிழ்ச் சங்கங்களுக்கும் பேரவைக்கும் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

கடந்த ஜூலை மாதம் கலிபோர்னியாவின் சாக்ரமெண்டோ நகரில் பேரவையின் 36 ஆம் தமிழ் விழா சிறப்பாக நடந்தேறியது. மூன்று நாட்களாக நடந்த விழாவில் ஏறத்தாழ 2500-க்கும் அதிகமானோர் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்தனர். சிறப்பான தமிழ் நிகழ்ச்சிகள், இணைய மரபுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், சிறப்பான உணவு மற்றும் உபசரிப்பு என வந்திருந்த அனைவரையும் விழாக் குழுவினர் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். இறுதி நாள் விழா அன்று தமிழ்ச் சங்கங்களின் அணிவகுப்பு சிறப்பாக நடந்தேறியது. இதில் ஒவ்வொரு தமிழ்ச் சங்கத்தினரும் தங்கள் தமிழ்ச் சங்கப் பதாகைகளுடன் தமிழ்க் கலைகளை முன்னிலைப்படுத்தி, நடனமாடி அணிவகுத்து வந்தனர். அணிவகுப்பு முடியும் பகுதியில், வந்திருந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகளை மேடையில் பேரவைத் தலைவர் அவர்கள் சிறப்புச் செய்தார். ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெறும் சங்கங்களின் சங்கமம் என்ற இந்த நிகழ்வு அனைத்துத் தமிழர்களுக்கும் ஊக்கத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. ஒவ்வொரு சங்கமும் பேரவையின் தூண் என்பதை இந்த நிகழ்வு உறுதிப்படுத்துகிறது. பேரவை விழாவில் ஒவ்வொரு ஆண்டும் அனைத்துத் தமிழ் சங்கத்தினரையும் தொடர்ந்து பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

பேரவை விழாவில், பேரவையின் 2023 ஆம் ஆண்டிற்கானப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேரவையின் சிறப்பான செயல்பாடுகள் பற்றியும் நிதி நிலைமை பற்றியும் விரிவான தகவல்கள் அளிக்கப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு முழுவதும் பேரவையின் சார்பாக நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டன. பேரவை அடிப்படையில் ஒரு தொண்டு நிறுவனம் - இதை நான் தொடர்ந்து பறைசாற்றி வருகிறேன். அதற்கு ஏற்ப பேரவை செய்த பல்வேறு தொண்டுப் பணிகள் குறித்த செய்திகள் இந்த பொதுக்குழு கூட்டத்தில் விவரிக்கப்பட்டன. தாய்த்தமிழ் பள்ளிகளுக்கான நிதி உதவி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், பயிர் ஊட்டச்சத்து திட்டம், களரி கலை அமைப்பிற்கான உதவி மேலும் தமிழ்நாட்டில் பல்வேறு சமூகப் பணிகளுக்கான உதவி என பேரவை எண்ணற்ற தொண்டுப் பணிகளை செய்துள்ளது. கூட்டத்தின் இறுதியில் வந்திருந்த பல பேராளர்கள் மற்றும் வாழ்நாள் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள் பதிலளித்தனர். இந்த பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கூட்டத்தின் குறிப்புகள் மின்னஞ்சலில் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழுக்காக, தமிழர் நலனுக்காக, தமிழ்ச் சங்கங்களுக்காக, பேரவைக்காக மற்றும் பேரவை விழாவிற்காக என ஐந்து தொகுதிகளின் கீழ் பல்வேறு குழுக்களை அமைத்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது, பேரவை. பேரவையில் இணைந்து செயலாற்ற பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. தமிழுக்காகச் செயல்பட ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் தமிழ்ச் சங்கங்களிலும் பேரவையிலும் இணைந்து தன்னார்வப் பணி புரிய வரும்படி அன்போடு அழைக்கிறேன். நமது தொடர் தமிழ்ப் பணிகள் தான் நமது அடுத்த தலைமுறைக்காகத் தமிழின் வளமையையும் செழுமையையும் உறுதிப்படுத்தும்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

(முடிவில்) இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பம் மிக வந்த போதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும். பேரவையின் பல்வேறு தமிழ் மற்றும் தமிழர் நலப் பணிகளை இன்பத்தோடு செய்து வருகிறோம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துக்களோ இருப்பின் அவற்றை secretary@fetna.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

வாழ்க தமிழ்!

கிங்ஸ்லி சாமுவேல்

செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

நார்த்வில், மிச்சிகன்

ஆசிரியர் கடிதம்

சிறு துளிகள் சேர்ந்து ஓடையாய், சிற்றோடைகள் பல இணைந்து ஆறாய், ஆற்றின் நீரோட்டம் பெருக்கெடுத்து நீர் எழுச்சியாய், பிரம்மாண்டமான காட்சியாய் நம் கண் முன்னே விரிந்தால் நமக்கு எத்தனை மகிழ்வாய் இருக்குமோ அத்தனை மகிழ்வாய் இருந்தது 36-வது பேரவை விழாவிற்கு நேரில் சென்று பங்கேற்ற தருணம். பல ஊர்களில் இருந்து தன்னார்வலர்கள் தமிழ் என்ற ஒற்றை குடையின் கீழ் ஒன்றிணைந்து தமிழ் உணர்வை, தமிழ்ப் பற்றை இணைந்து வளர்த்த ஒரு கோலாகலத் திருவிழா என்று நிச்சயமாகச் சொல்லலாம். தமிழ் இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள், தொழில் முனைவோர், திரை இசைக்கலைஞர்கள், மரபுக் கலைஞர்கள், சின்னத்திரை நட்சத்திரங்கள் என்று பெரும் திரளானோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வு வட அமெரிக்காவில் மேற்குப் பகுதியில் இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட விழாவாகும். முதன் முறையாக சிறப்பாக மேடையில் அரங்கேறியது என்ற வகையில், தமிழகத்தில் இருந்து வருகை புரிந்த தமிழர் மரபுக் கலைக் குழுவினரைக் கண்டிப்பாகச் சொல்லலாம். தமிழக அரசால் தெரிவு செய்யப்பட்ட 12 மரபிசைக் கலைஞர்கள் பங்கேற்ற தமிழர் பாரம்பரிய மரபிசை நிகழ்ச்சி, அமெரிக்கத் தொலைக்காட்சியில் வரும் வினாடி வினா பாணியில் முதன் முதலாக பேரவை விழாவில் இடம் பெற்ற ஜெபர்டி நிகழ்ச்சி, இலக்கிய ஆளுமைகள் பங்கேற்ற ஆய்வரங்கம், கருத்துக்களம், பட்டிமன்ற நிகழ்ச்சி, தமிழ் இலக்கியப் பாடல்களுக்கு மெட்டமைத்து குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் இணைந்து பாடிய தமிழிசை நிகழ்ச்சி, கவியரங்கம் எனப் பல அருமையான நிகழ்வுகள் மேடையில் அரங்கேறின. வட அமெரிக்கவாழ் குழந்தைகள் பங்கேற்ற வணக்கம் வட அமெரிக்கா, தமிழ் கூறும் தலைமுறை, குறள் தேனீ உள்ளிட்ட பல்வேறு போட்டிகளின் இறுதிச் சுற்று நடத்தப் பெற்று பரிசுகளும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற அனைவருக்கும் அருவி குழுவினரின் மனமார்ந்த வாழ்த்துகள்.

ஆகத்து 28, 1963 இல் "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்ற உரையை மார்ட்டின் லூதர் கிங் அவர்கள் வழங்கினார். சமூக ஏற்றத் தாழ்வினைக் களையவும், அனைவருக்கும் சம அளவில் வேலைவாய்ப்பு, முன்னேற்றம், கல்வி, சமூக உரிமை ஆகியன கிடைக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தியும் அவருடைய உரை அமைந்தது. இந்தியாவில், அண்மையில் மேற்கே மணிப்பூர் தொடங்கி, தெற்கு முனையான தமிழ்நாட்டில் உள்ள நாங்குநேரி வரை நடைபெற்ற குற்றச் சம்பவங்கள் இன்னமும் மனித மனங்களில் வேரோடிப் போன பிரிவினை எண்ணங்களும் அதை முறியடிக்கக் கூடிய மாற்று வழிகளைத் தேட வேண்டிய கட்டாயத்தையும் நமக்கு வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

பேதம் வளர்க்கப் பெரும்பெரும்பு ராணங்கள்!
சாதிச்சண்டை வளர்க்கத் தக்க இதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்

என்று சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற நூலில் இடம்பெற்ற பாரதியின் வரிகள் இன்றும் உயிர்ப்புடன் இருப்பதற்கு பொருளாதார, அரசியல் மற்றும் கல்வி நிலை எனப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் அடிப்படையில் அன்பற்ற சமூகச் சூழல் உள்ளிருந்தே அழிக்கும் பகையைப் போன்றது. அன்பின் வழியது உயிர் நிலை என்று திருக்குறள் பேசுவதையே பாரதியாரும் இச்சிக்கலுக்கானத் தீர்வாக வைக்கின்றார்.

அன்பென்று கொட்டு முரசே!-மக்கள்

அத்தனை பேரும் நிகராம்;

இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு

யாவரும் ஒன்றென்று கொண்டால்.

தமிழ் இலக்கியங்கள் யாவும் அன்பின் மேன்மையை, அடுத்தவருடன் அன்பு பாராட்டுவதை உயர்த்திப் பிடிக்கின்றன. சமூக ஊடகங்களின் வரவால், அமெரிக்காவில் வசிக்கும் ஒவ்வொருவரும், ஆண்டுக்கு சராசரியாக பதினோரு நூல்களை மட்டுமே படிப்பதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகின்றது. இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது என்பதும் கவலை தரும் விடயம்.

அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!

இந்த நிலையில் மனித மனத்தை விரிவாக்கும் தமிழ் இலக்கியத்தை அனைவரிடமும், குறிப்பாக அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஒரு மாபெரும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. அதற்கான முன்னெடுப்புகளைச் சோர்வுறாமல் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதைத் தான் இத்தகைய சம்பவங்கள் நமக்கு நினைவுபடுத்துவதாகக் கொள்ள வேண்டும். இலையுதிர் காலங்களில் தேவையற்ற இலைகளை மரங்கள் உதிர்ப்பது போல, மனித மனங்களும் பழைய எண்ணங்களைத் தொலைத்து மேன்மையான ஆக்கப்பூர்வமான புதியனவற்றைச் சிந்திக்க வேண்டும்.

இந்த இதழின் அட்டைப்படத்திற்கு இலையுதிர் பருவத்து இயற்கைக் காட்சியை ஓவியமாய்த் தீட்டி அளித்த அருவி மலர்க் குழுவின் துணை ஆசிரியர் திருமிகு ஷீலா ரமணன் அவர்களுக்கு மிக்க நன்றி. அருவியின் ஒவ்வொரு இதழிலும் வட அமெரிக்காவில் வசிக்கும் ஓவியர்களை, எழுத்தாளர்களை நீங்கள் அனைவரும் அறியும் வண்ணம் தொடர்ந்து அடையாளப்படுத்தி வருகிறோம். இதைப் போன்ற பல்வேறு முயற்சிகளுக்கு கரம் கொடுத்து பங்காற்றி வரும் அருவி மலர்க் குழுவினர், அருவி மலருக்கு செய்திகளை அளிக்கும் பல்வேறு தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றிகள். அருவியின் தொடர் பயணம் உங்கள் அனைவரின் பங்களிப்பும் அன்றிச் சாத்தியம் ஆகாது. அருவி குறித்த உங்கள் மேலான பின்னூட்டங்களை aruvimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

மீண்டும் அடுத்த அருவி மலரில் சந்திப்போம்.

இரம்யா ரவீந்திரன்

அருவி ஆசிரியர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

சார்லட், வட கரோலைனா

நன்றி மடல்

அனைவருக்கும் வணக்கம்,

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்திய பேரவையின் 36வது தமிழ் விழா கலிஃபோர்னியாவின் தலைநகரான சாக்ரமெண்டோவில் யூன் 30, யூலை 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. "தொன்மை தமிழரின் பெருமை" என்ற கருப் பொருளும், வள்ளலார் மற்றும் ஆறுமுகநாவலரின் தமிழுக்கானத் தொண்டைச் சிறப்பிக்கும் பொருட்டு அவர்களது 200வது அகவையைக் கொண்டாடியதும் விழாவிற்குச் சிறப்புச் சேர்த்தன. இவ்விழாவிற்கு வட அமெரிக்காவிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 2,500க்கும் அதிகமான மக்கள் வருகை தந்திருந்தனர்.

பேரவையின் 36வது தமிழ் விழாவில், வட அமெரிக்க வாழ் தமிழ் மக்களுடன் உறவுப் பாலத்தை வலுப்படுத்தும் விதமாக தமிழ்நாடு முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலமாகவும் , புதுவை முதல்வர் ந. ரங்கசாமி அவர்கள் கடிதம் மூலமாகவும் தங்களது வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்ததும் விழாவிற்கு மேலும் சிறப்புச் சேர்த்தன.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" - திருக்குறள் 467

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக இவ்விழாவிற்கு நேரம் பாராமல், கண் துஞ்சாமல், சோர்வின்றி, தனிப்பட்ட விடயங்களைப் பின்தள்ளி, இவ்விழாவின் பல்வேறு நிகழ்வுகளில் ஒரு மனதாகத் தோள்கொடுத்து, உதவி என்று கேட்ட போதெல்லாம் முகம் கோணாமல், தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, ஒற்றுமையாக, 300-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், பேரவை விழாவிற்காக உழைத்து இருக்கிறார்கள்.

கலை, இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள், இணை அமர்வுகள், தொழில் முனைவோர் மாநாடு, மரபுக்கலை கலைஞர்கள், கலைத்துறை நட்சத்திரங்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த

எழுத்தாளர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகளின் சிறப்பு நிகழ்வுகள், அறுசுவை உணவு என்று மூன்று நாட்களும் பல்வேறு சிறப்பான நிகழ்வுகளோடு பேரவை விழா சாக்ரமெண்டோவில் பெரும் திருவிழாவாக இனிதே நிறைவுற்றது.

36-வது பேரவை விழாவில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இருந்தாலும் அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

1. கலிபோர்னியா துணை நிலை ஆளுநர் மாண்புமிகு எலினி கவுனாலகிஸ், தமிழ் நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் மகேசு பொய்யாமொழி மற்றும் பல்வேறு தொழில் ஆளுமைகள் பங்கு பெற்ற தொழில் முனைவோர் மாநாடு.
2. தமிழ்நாடு அரசின் சார்பாகக் கலந்து கொண்ட மரபுக்கலை கலைஞர்களான திரு. மருங்கன் பாண்டி, திரு. பாண்டியராஜ் அழகு, திரு. சக்திவேல் சங்கர், திரு. முத்துச்சந்திரன் பாலகிருஷ்ணன், திரு. கணேசன் ரத்தினசாமி, திரு. ஜீவராவ் நதிராவ், திருமிகு பார்கவி பாஸ்கர், திருமிகு தேவி கந்தன், திரு. குமரேசன் பழனி, திரு. விக்னேஷ் வெங்கடேசன், ராஜமாணிக்கம் வெள்ளைசாமி, திரு. ராஜ்குமார் ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்ட 90 நிமிட மரபுக்கலை நிகழ்வு.

3. திரு. இமையம், திரு. பவா செல்லதுரை, திரு. ஜோ மல்லூரி, முனைவர் கு. உமா தேவி மற்றும் இலக்கியச் சுடர் திரு. தி. இராமலிங்கம் என்று கலை, எழுத்து மற்றும் இலக்கிய ஆளுமைகள் பங்கு பெற்ற தமிழின் தொன்மை பற்றிய ஆய்வரங்கம்.

4. திருக்குறளைக் குழந்தைகள் உதவியுடன் இசைவடிவில் அரங்கேற்றியது.

5. தமிழ் ஓசை - திரு. ஜேம்ஸ் வசந்தன் குழுவினரின் சேர்ந்திசை வடிவில் தமிழ் இலக்கியம்.

6. திரு. சுகி சிவம், திரு. மோகன சுந்தரம் மற்றும் திருமதி பர்வின் சுல்தானா பங்கு பெற்ற சிறப்புப் பட்டிமன்றம்.

7. திருமதி சுதா ரகுநாதன் குழு வினரின் தமிழ் இசை.

8. குழந்தைகளுக்கானத் தமிழ் வினாடி வினா அறிமுகம்.

திரு. ஜான் பிரிட்டோ

திருமிகு மலர்மகள் அகிலன்

9. தமிழரின் தொன்மை, பெருமை பற்றிய அருங்காட்சியகம்.

10. மருத்துவர்கள் திரு. அருள் அமுதன் மற்றும் திருமதி உமா செந்தில்குமார் ஆகியோர் பங்கு பெற்ற சித்த மருத்துவம், நவீன இலக்கியம் குறித்த இணைய அமர்வுகள்.

11. திரை நட்சத்திரங்கள் திரு. சந்தானம், இயக்குநர் திரு. சசிகுமார், செல்வி ஐஸ்வர்யா ராஜேஷ், நடன இயக்குநர் திரு. சாண்டி மற்றும் சின்னத்திரை நட்சத்திரங்கள் திரு. பாலா, திருமதி மணிமேகலை, திரு. விஜய், திரு. ஆதவன், திரு. சுதன் பங்குபெற்ற சிறப்பு நிகழ்வுகள்.

12. சுற்றுச்சூழல் பேண பாக்கு மட்டைத் தட்டில் உணவு பரிமாறியது.

13. சிறப்புப் பேருந்தில் சுற்றுப்பயணம்.

14. மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தனித்திறனை பேரவை விழாவில் கொண்டாடியது.

15. விழா அரங்கம், இணை அமர்வுகள் மற்றும் தங்கும் விடுதி அனைத்தும் மிக அருகில் அமைந்தது.

16. மூன்று நாட்கள் அறுசுவை உணவு.

இவற்றையெல்லாம் தாண்டி ஒரு சில குறைகள் இருந்திருக்கலாம். எந்த ஒரு நிகழ்விலும் சிற்சில குறைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எனவே குறைகளை விடுத்து பெருமனம் கொண்டு நிறைகளைக் காண வேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சாக்ரமெண்டோவில் நடைபெற்ற இப்பெரும் தமிழ் விழாவினை நாம் கொண்டாட, பாராட்ட, நினைவில் கொள்ள பல காரணங்கள் இருக்கின்றன. அளவில் சிறிய தமிழ்ச் சங்கமாக இருந்தாலும் 300+ தன்னார்வலர்களின் உழைப்பால், 2300 க்கும் அதிகமான பங்கேற்பாளர்களால், ஓராண்டுக்கு மேலான தொடர் பணியால் விழாவை சிறப்பாக நடத்தி இருக்கிறோம் என்று நம்புகிறோம். இதற்காக உழைத்த தன்னார்வலர்கள், பங்கேற்பாளர்கள், விழா ஒருங்கிணைப்பாளர்கள், புரவலர்கள் அனைவருக்கும் மீண்டும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்

தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்

தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்!" என்பதை மெய்ப்பிக்கும் வகையில் திசை, இன பாகுபடில்லாமல் வளர்ந்த தமிழ் மொழி மேலும் வளர, வாழ, தழைத்தோங்க தமிழ் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழால் இணைவோம்!!

தமிழைத் தரணி போற்றிடச் செய்திடுவோம்!!

அன்புடன்

ஜான் பிரிட்டோ - ஒருங்கிணைப்பாளர்

மலர்மகள் அகிலன் - இணை ஒருங்கிணைப்பாளர்

36வது பேரவை விழா, சாக்ரமெண்டோ

தமிழ் வானம்

மகாகவி ஈரோடு தமிழன்பன்

பெயரில்லாமல் இருந்த வானம்
விரிவாகத்தான் இருந்தது; தமிழில்
பெயரிட்டபோது
மேலும் அது விரிவாகிவிட்டது.

பெயரில்லாமல் சுழன்றபோதும் பூமி
அழகாகத்தானிருந்தது.
தமிழில் பெயர் சூட்டியபிறகு
அதன் சுழற்சிக்குக் கவர்ச்சி அதிகமானது

ஏற்கனவே சில்லென்றிருந்த
நீரைத் தமிழ் தொட்டதும்
அதுவரையில்லாத குளிர்ச்சி!

பெயரில்லாமல் இருந்தபோதும்
வெதுப்பிக் கொண்டுதான் இருந்தது நெருப்பு;
வீசிக்கொண்டுதான் இருந்தது காற்று;
ஆனால்
எங்கள் தமிழால் சுட்டுப்பட்டபோது
அவற்றுக்கு வெதுப்பவதில், வீசுவதில்
எத்தனை ஆற்றல் அடுக்குகள்! அர்த்தங்கள்!

எழுத்துக்களைக் கொண்டு
எப்படிச் சொற்களைத்
தமிழ் செய்கிறது என்பதைப்
பார்த்த பிறகுதான்
இதழ்களைக் கொண்டு மலர்களை
செய்யக் கற்றுக்கொண்டது
இயற்கை.

பிறைகள் வளர்ந்தும்
பவுர்ணமி ஆகமுடியாத வேளை,
தமிழ் அவ்வையிடம் அறிவுரை கேட்டது
இயற்கை

பல்வேறு நாட்டு இலக்கியத் தூதர்களும்
தொல்காப்பியர் வீட்டுத் திண்ணையில்
காத்துக் கிடக்கின்றனர்;
திணைக் கோட்பாட்டுவழித் தமிழ் இலக்கணத்தில்
இணைவதற்குத் தம் மொழியும் மக்களும்
விருப்பம் கொண்டதைத் தெரிவிப்பதற்காக

நாம் தமிழில்
பேசுகிறோம்; தமிழ்
நம்மோடு எப்போது பேசும் ?



பேரவையின் அன்புடை நெஞ்சம்

A Matrimonial Service from FeTNA

கலிபோர்னியா தலைநகர் சாக்ரமெண்டோவில் சமீபத்தில் நடந்த முப்பத்தியாறாவது பேரவை விழாவில், அமைக்கப்பட்டிருந்த வணிக நிறுவனங்களுக்கானச் சாவடியில் (*Vendor Booth*) தன்னுடைய தகவல் பந்தல் ஒன்றை நிறுவியிருந்தது பேரவையின் ”அன்புடை நெஞ்சம்” குழு. அமெரிக்க/கனடா வாழ் தமிழ்ச் சமூகத்தினர் மணமக்களைக் கண்டெடுக்கும் முயற்சியில் தன் பங்களிப்பாகப் பேரவை எடுத்திருக்கும் முயற்சி நல்ல முறையில் முன்னேறி வந்தாலும், இன்னும் நாம் எதிர் பார்க்கும் விதத்தில் நம் மக்களை சென்றடைய வில்லை என்ற மனக்குறை பேரவைக்கு உண்டு. இதனைக் களையும் நோக்கில் பேரவை விழா மட்டுமல்ல, இனி வரக்கூடிய எந்த தமிழ் விழாவிலும், நம் தகவல் பந்தல் இருக்க வேண்டும் என்ற நோக்கில் சாக்ரமெண்டோ விழாக்குழுவை சேர்ந்த தில்லி ரமேஷ் மற்றும் சுந்தர் பசுபதியின் துணைக்கொண்டு அன்புடை நெஞ்சம் குழு தகவல் மையம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

தகவல் பந்தல் அமைப்பதற்கான இடு பொருட்கள் (*Banner / Standee/ Business cards*) உள்பட எல்லாவற்றையும் விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே திரு. இளங்கோவன் தங்கவேலு விழா அமைப்பாளர்களுக்கு அனுப்பி வைத்தார். விழா அன்று காலையே திரு. சுந்தர் பசுபதி அரங்கத்திற்குச் சென்று அவைகளை அன்புடை நெஞ்சத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த சாவடியில் நிறுவினார். பின் இத்தகவலை திருமதி ஃப்ளாரன்ஸ் ஜார்ஜ் அவர்களுக்குத் தெரியப் படுத்தவும் அவர் அங்கு வந்து தன் சேவையைத் துவங்கினார். பின் திரு. சுந்தர் குப்புசாமி அவர்கள் தன் தனயன் சிபியோடு வந்து இருந்து சாவடியைப் பார்த்துக் கொண்டார். பின் அவரைத் தொடர்ந்து

திரு. சுந்தர் பசுபதி அவர்கள் பார்த்துக் கொண்டார். பேரவை விழா நடந்த இரு நாட்களுமே இது சுழற்சி முறையில் தொடர்ந்தது. இந்த முயற்சியில் ஈடுபட்ட அன்புடை நெஞ்சம் குழுவில் உள்ள அனைவருக்கும் நன்றி.

நாங்கள் கண்டிருந்த வகையில், அந்தச் சாவடி வளாகத்தைப் பார்க்க வந்த பெரும்பாலான தமிழ் மக்களுக்கு அன்புடை நெஞ்சம் என்றால் என்ன என்று தெரிந்திருக்கவில்லை. எனவே இதைப் பற்றி அனைவருக்கும் விளக்கிச் சொல்ல வேண்டி இருந்தது. இது ஒரு திருமண இணைப்புச் சேவை என்று தெரிந்தவுடன் அனைவரும் கேட்ட கேள்வி ”இதை கொஞ்சம் தெளிவாகப் பேரவை வலைத் தளத்திலும், விளம்பர பதாகையிலும் போடக் கூடாதா “ என்பதே. அப்படி போடாவிட்டால் இதைத் தமிழ் *Tinder/match.com* என்றும் பொருள் படுத்திக் கொள்ளவே அதிக வாய்ப்பு இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். இதன் பயனாளர்கள் இளையோர்களைக் காட்டிலும், அவர்தம் பெற்றோர் மற்றும் உறவினரே அதிகம் என்பதனைக் கருத்தில் கொண்டு, முறையாக நன்கு விளம்பரப் படுத்த வேண்டும் என்ற யோசனை வழங்கினர். இந்த இரண்டு நாட்களில், அதிக அளவில் நம் வணிக அட்டையை (*Business cards*) வாங்கிச் சென்றவர்கள் அனைவரும் பெற்றோர்களே. பார்வையாளர்கள் கவனம் பெறும் பொருட்டு நம் தகவல் பந்தலில் திருமணம் சம்பந்தப்பட்ட தமிழ் சினிமா பாடல்களும் ஒலிபரப்பு செய்யப்பட்டன.



இந்த விழா மூலமாக அன்புடை நெஞ்சம் எத்தனை மக்களைச் சென்றடைந்தது என்பதை வரும் வாரங்களில் வரும் புதிய பயனாளர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். விழா முடிந்து ஒரு வாரத்தில் அன்புடை நெஞ்சம் குழு மெய்நிகர் கூட்டம் ஒன்றின் மூலம் பேரவை விழாப் பற்றியும், நம் மக்கள் அன்புடை நெஞ்சத்தை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதையும் பகிர்ந்து கொண்டது. மக்களின் கருத்தை ஒட்டி, வரும் நாட்களில் இந்தச் சேவையில் என்ன மாற்றங்கள் கொண்டு வரலாம் என்பதைக் குழு முடிவு செய்யும். இந்தச் சேவை நல்ல முறையில் செயல்படுவது, பெற்றோர் மூலமாக நடக்கும் திருமணங்களில் நம்பிக்கை உள்ள நம் அடுத்த தலைமுறைக்கு பேருதவியாக இருக்கும்.

36வது பேரவை விழா வாழ்த்துரை

வடதிசைசார் அமெரிக்கப்பேர்
 மாண்புடைய தமிழவைக்குக்
கடமைமிகு தமிழின் ஆசான்
 கவிதையினால் சொலும்வணக்கம்!
அடடாஓ அருமை நீங்கள்
 அருந்தமிழ்க் காத லாலே
திடம்படவே விழாநிகழ்த்திச்
 சேர்த்தீர்கள் புகழ் தமிழ்க்கே!

ஆயிரம் பல்லாயிரங்கள்
 அன்புமக்கள் கூடியார்த்துத்
தாய்த்தமிழுக்குச் செய்ததொண்டை
 தரணியிலே எவர்மறப்பார்?
நேயமிகப் பணிசெய் அன்பர்
 நிறைப்பண்பின் மேலோர்க் கெல்லாம்
வாயாலும் மனத்தினாலும்
 வாழ்த்துக்கள் சொன்னேன் வாழ்க!

பொன்னிகர்த்த மனமும் கொண்டார்
 பூநிகர்த்த புன்னகையார்
தன்னிகர்த்த தோழ ரெல்லாம்
 தகைபெறவே அமெரிக் காவில்
மின்னிகர்த்த வானின் கீழே
 வடதிசை நகர்கண் கூடி
என்னிகர்த்த புலவர் ஏத்த
 எடுத்தனர்காண் தமிழ்வி ழாவே!

பல்லாயி ரம்பேர் தாமும்
 படைதிரண் டாற்போல் பண்டைச்
சொல்லாயி ரம்செய் சங்கத்
 தொன்மதுரை நாடே யொக்க
வில்லாயி ரத்தின் அம்பாய்
 விரைந்துபணி செய்தனர் காண்!
நாலாயிர ந்தான் நன்மை
 நாட்டவே விழாச் செய்தாரே!

இயற்றமிழின் நிகழ்ச்சி யாத்தார்
 இசைத்தமிழின் வண்ணம் செய்தார்
மயலொழிய நாட கத்தின்
 வளர்க்காட்சி காட்டி வைத்தார்
செயலெல்லாம் தமிழ்க்கே யாக
 செய்தநகர் சாக்ர மெண்ட்டோ
வியப்பதனின் வியப்பே யாக
 விளங்கிற்றே மூன்று நாளும்!

பம்பரங்கள் தோற்றுப் போகும்
 பணிசெய்த திறந்தான் என்னே !
கம்பரும் கண்டி ருந்தால்
 கண்களி மயக்கத் தோடே
உம்பர்தம் பதியே ஈங்கே
 உணர்வுற வந்த தென்பார்
நம்பரும் திறலின் மைந்தர்
 நங்கையர் உழைத்தார் நன்றே !

பாலாசு வாமி நாதன்
 பாங்குடைத் தலைமை கொண்ட
மேலாண்மை இயக்கத் தாலே
 வடவமெரிக் காவில் முந்நாள்
பாலார்ந்த தேன்போல் அன்னைப்
 பைந்தமிழ் ஆக்க முற்ற
கோலாக லத்தைச் சொல்லால்
 கூறவே முடியா தம்மா!

பேரவையின் தமிழ் பீட
விருதாளர் பேராசிரியர்
முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

போர்ட்லண்ட் மாநகர தமிழ் மன்றம்

GPTM

Greater Portland Tamil Mandram

போர்ட்லாந்து மாநகரத் தமிழ் மன்றம்

போர்ட்லாந்து கலைக்குழு, போர்ட்லாந்து மாநகரத் தமிழ் மன்றம் சார்பாக, இவ்வாண்டு 2023, ஜூலை மாதம் சாக்ரமெண்டோவில் நடைபெற்ற பேரவைத் தமிழ் விழாவில் பங்கேற்றதில் பெருமை கொள்கிறது. அதற்கு முத்தாய்ப்பாக, தமிழரின் பறையைப் பல்வேறு நிகழ்வுகளில் அரங்கெங்கும் ஒலித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. மேலும், வேள்பாரி நாடகக் குழுவினருக்கு முன்சென்று பறை அடித்து ஊர்வலம் செல்ல வாய்ப்பளித்த சாக்ரமெண்டோ தமிழ்ச் சங்கத்திற்கும், மரபுக் கலை குழுவிற்கும் நன்றி. பேரவை விழாவில் ஒரு நிகழ்வான சங்கங்களின் சங்கமம் நிகழ்ச்சியில் பறை வாசித்து அனைவரையும் மகிழ்வித்தது அளப்பரிய பெருமை தருவதாக அமைந்தது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் 2023ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவை யூலை 8 ஆம் சனிக்கிழமை அன்று சிறப்பாகக் கொண்டாடியது. பிற்பகல் 2:30 மணியளவில், தமிழ்த்தாய் வாழ்த்து, திருக்குறள் மறையோதல் நிகழ்வுகளுடன் முத்தமிழ் விழா இனிதே தொடங்கியது. வழக்கம்போல், உள்ளூர் குழந்தைகளின் தமிழுணர்வூட்டும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுக்கிடையே, பெற்றோர்களின் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் சிலவும் அரங்கேறி அரங்கிலிருந்தோரை மகிழ்வித்தன. கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த தவத்திரு சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் விழாவில் கலந்து சிறப்புரை ஆற்றினார்கள். நகைச்சுவைப் பேச்சாளர் திரு. மோகனசுந்தரம் மற்றும் சொல்வேந்தர் திரு. சுகி சிவம் ஆகியோரின் தனிச் சொற்பொழிவுகளும், பட்டிமன்றமும் சிறப்புற நடைபெற்றன. திரையிசைக் கவிஞர் முனைவர் கு. உமாதேவி அவர்களின் சங்க இலக்கியங்களில் பெண் கவிகள் என்ற தலைப்பில் ஆற்றிய தனியுரை பெரிதும் பாராட்டப்பட்ட ஒரு நிகழ்வு ஆகும். தமிழிசை மரபுக்கருவிகளான தவில், நாதசுரம் முதலியன கொண்டு உள்ளூர் கலைஞர்கள் மேடையில் நிகழ்த்திய நிகழ்வு மற்றும் சிறப்பு அழைப்பாளர் களை மேடைக்கு அழைத்து வர பயன்படுத்திய பாரம்பரிய இசைக் கருவிகளின் மங்கல ஓசை அரங்கிலிருந்தோரையும் வெளியில் நின்று வேடிக்கைப் பார்த்தோர்களையும் மரபிசையில் மயங்க வைத்தது என்றால் அது மிகையாகாது.

தமிழ்ப்பள்ளிகளில் பயின்ற/பயிலும் இளைய தலைமுறையினர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியது பாராட்டிற்குரியதாக இருந்தது. மதிய உணவு, இரவு உணவுடன் விழாவிற்கு வந்திருந்த குடும்பங்கள் பசுமை நிறைந்தநினைவுகளுடன் விடை பெற்றுச் சென்றனர். வரும் மாதங்களில் தமிழ்ச்சங்கச் சிற்றுலா, வள்ளலார் 200ஆம் ஆண்டு விழா, குழந்தைகள் நாள் முதலிய விழாக்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தமிழர்களின் இன, மொழிப் பற்று

எழுத்தாளர் இமையம்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை FeTNA 36ஆவது ஆண்டு விழா கலிஃபோர்னியா மாகாணம், சாக்ரமண்டோ நகரில் ஜூன் 30, ஜூலை 1, 2 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அமெரிக்காவில் எழுபதுக்கும் அதிகமான தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கூட்டமைப்புதான் FeTNA. இந்த அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரில் விழாவைக் கொண்டாடி வருகிறது.

FeTNA 36ஆவது ஆண்டு, மூன்று நாள் விழாவில் ஐந்து வெவ்வேறு விதமான நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேசுவதற்கான வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. அதிலொன்று 'நாளைய தமிழ் நானிலத்தில்' மற்றொன்று 'தமிழின் தொன்மையும் பெருமையும்'. பொது அரங்கம், கலை அரங்கம், பட்டிமன்றம், நடனம், கலை நிகழ்ச்சிகள், இசை, தொழில்முனைவோர் மாநாடு என்று ஒரே நேரத்தில் பல அரங்குகளில் பல நிகழ்வுகள் நடைபெற்றன.

மூன்று நாள் விழாவில் பார்வையாளர்கள், பங்கேற்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், தன்னார்வலர்கள் என்று பெரும் கூட்டம். நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. விழாவில் என்னை மிகவும் வியப்படைய வைத்த விஷயம் பல மாகாணங்களிலிருந்து குடும்பம் குடும்பமாகப் பலர் வந்திருந்ததுதான். நான் இதுவரை இப்படியொரு விழாவைக் கண்டதில்லை. அமெரிக்கத் தமிழர்கள் FeTNA விழாவுக்குக் குடும்பத்தோடு வருவது இயல்பானது என்று பலரும் சொன்னார்கள்.

அமெரிக்காவில் தெலுங்கர்கள், குஜராத்திகள் அதிகமாக வசிக்கிறார்கள். தெலுங்கர்களும் குஜராத்திகளும் கூட்டமாகக் கூடவே செய்கிறார்கள். கலை நிகழ்ச்சிகள் நடத்தவே செய்கிறார்கள். அவர்களின் கூடுகை என்பது பெரும்பாலும் வியாபாரம், பொருளாதாரம் சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது. ஆனால், தமிழர்கள் FeTNA விழாவில் மொழியின் பெருமையைப் பேசுவதற்காகக் கூடுகிறார்கள். பொதுவாகவே, தமிழர்களுக்கு மொழி மீதான பற்றும் பெருமிதமும் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அந்த உணர்வை அமெரிக்கத் தமிழர்களிடம் அதிகமாகக் காண முடிந்தது. "விமானத்தை விட்டு அமெரிக்காவில் இறங்கியதும் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் மீதும்

தானாகவே பற்று வந்துவிடுகிறது" என்று பலரும் சொன்னார்கள்.

தமிழர்கள் - தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் - தமிழ்நாடு சரியில்லை, வேலை வாய்ப்பில்லை என்று சென்றவர்கள், தமிழ்நாட்டில் நிலவுகிற இன, மத, வட்டார வேறுபாடுகள் எதுவுமின்றித் தமிழராய் மட்டுமே *FeTNA* விழாவில் பங்கேற்றது ஆச்சரியமளித்தது. விழாவிற்கு வந்திருந்த ஒவ்வொருவருடைய மனதிலும் பேச்சிலும் செயலிலும் தமிழ் மொழியை, அதன் இலக்கியப் பெருமையை, பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாப்பது, அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவது மட்டுமே லட்சியம் என்பது தெளிவாகவே வெளிப்பட்டது. தமிழ்நாட்டில் இருக்கும் போது இல்லாத உணர்வு அமெரிக்காவுக்குச் சென்றதும் ஏற்பட்டிருக்கிறது. வரவேற்க வேண்டிய விஷயம்.

இலங்கையில், மலேசியாவில், சிங்கப்பூரில், கனடாவில் காணாத அதிசயத்தை அமெரிக்காவில் பார்க்க முடிந்தது. அது என்னவென்றால் கூட்டுழைப்பு. வட அமெரிக்கச் சங்கப் பேரவையின் நிர்வாகிகள் மட்டுமல்ல, தன்னார்வலர்கள் காட்டிய அன்பும் அக்கறையும் பராமரிப்பும் வியப்பூட்டும் வகையில் இருந்தன. விருந்தினர்களைக் கைக்குழந்தையைக் கவனித்துக்கொள்வதுபோலக் கவனித்துக்கொண்டார்கள். ஒவ்வொருவரின் பேச்சிலும், செயலிலும் தமிழராய் உணரவைத்தார்கள். தமிழராய் உணர்வோம், தமிழராய் உயர்வோம் என்ற வாக்கியம் அடிக்கடி மனதில் தோன்றியது. உண்மையைச் சொன்னால் அமெரிக்க மண்ணில் என்னைத் தாங்கிப் பிடித்தது தமிழ் மொழிதான். தமிழன் என்ற அடையாளம்தான்.

FeTNA விழாவில் மட்டுமல்ல, சிகாகோ தமிழ்ச் சங்க, நியூ ஜெர்ஸி தமிழ்ச் சங்க, திணை அமெரிக்க, வாஷிங்டன் டி.சி. தமிழ்ச் சங்க நிர்வாகிகள், பெரியார் பன்னாட்டு அமைப்பினர், நியூயார்க் தமிழ்ச் சங்க நிர்வாகிகள் என்று எல்லாருமே அன்பால் நிறைத்தனர். எல்லாருடைய நோக்கமும் தமிழை, அதன் பெருமையைப் பேசுவதாக மட்டுமே இருந்தது. தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு தமிழரை வரவேற்பதில், உபசரிப்பதில், கொண்டாடுவதில் பலரிடம் போட்டியைக் காண முடிந்தது. எனக்குக் கிடைத்த அன்பு, வரவேற்பு, மதிப்பு என்பது எனக்கானது அல்ல, தமிழ் மொழிக்கானது, அதன் இலக்கிய செழுமைக்கானது. தமிழன் என்ற அடையாளத்திற்கானது.

FeTNA விழாவும் சரி, சிகாகோ, நியூ ஜெர்ஸி, வாஷிங்டன் டி.சி., நியூயார்க்கில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புகளிலும் சரி, நான் கண்ட உண்மைத் தமிழர்கள் தமிழ் மொழியைப் பெரிய பொக்கிஷமாகக் கொண்டாடுகிறார்கள் என்பது. உலகில் வேறு எந்த மொழிக்காரர்களிடம் இந்த மாதிரியான உணர்வு மேலோங்கி இருக்கிறதா என்று தெரியவில்லை. 'தமிழ் மொழி 'தமிழ்ச்செல்வம், தமிழ்ச்செல்வன், தமிழ்ச்செல்வி' என்று பெயர் வைத்துக்கொள்கிற மரபு வேறு இனத்தவரிடம் இருக்குமா என்பது சந்தேகமே. சான்பிரான்சிஸ்கோவிலிருந்த சாக்ரமண்டோவுக்கு என்னை அழைத்துச் சென்றவரின் காரின் பின்னால் 'தமிழன்டா' என்று எழுதப்பட்டிருந்தது.

அமெரிக்கத் தமிழர்களிடம் அதிகமாகக் காணப்பட்ட உணர்வு தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான். மொழியை, பண்பாட்டை, கலாச்சாரத்தைக் காப்பதற்கான ஒரே வழி புதிய நூல்களை எழுதுவதும் படிப்பதும்தான். எந்த மொழியில் அதிகமாக இலக்கிய நூல்கள் எழுதப்படுகின்றனவோ, எந்த மொழி நூல்கள் அதிகமாகப் படிக்கப்படுகின்றனவோ - அந்த மொழிதான் நிலைத்திருக்கும். நீடித்திருக்கும். மொழியை வளர்ப்பதற்கான, வளப்படுத்துவதற்கான ஒரே வழி தரமான இலக்கிய நூல்களை எழுதுவதும், எழுதப்பட்ட நூல்களைப் படிப்பதும், படிக்கச் செய்வதும்தான்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் புதிய சொற்களை உருவாகிக் கொண்டே இருக்கின்றன. தமிழ் மொழி என்ன ஆகுமோ என்ற கவலை யாருக்கும் தேவையில்லாதது. தமிழ் மொழி காலத்துக்கேற்றவாறு உருமாறிவந்திருக்கிறது. எத்தனை படையெடுப்புகள் நடந்திருக்கின்றன, எத்தனை மொழிக் கலப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. எத்தனையோ சவால்களைத் தாங்கிக்கொண்டு தமிழ் நிலைத்திருக்கிறது, நீடித்திருக்கிறது. காரணம், தமிழ் மொழி இன்றும் மக்கள் பேசும் மொழியாக இருக்கிறது, இலக்கிய மொழியாக

இருக்கிறது. மொழிப் பற்று வேறு, மொழி வெறி வேறு. நான் எப்போதும் மொழி வெறியனாக, மாற்று மொழி வெறுப்பாளனாக இருக்க மாட்டேன். அந்தப் பண்பைத் தமிழ் மொழி இலக்கியங்கள் கற்றுத்தரவில்லை.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர் திரு. பாலா சுவாமிநாதன், திரு. ஜான் பிரிட்டோ, திரு. அசோகன் தங்கராசு போன்றவர் களோடு சான் பிரான்சிஸ்கோவில் வசிக்கும் திரு. பாண்டியன், திரு. சுந்தர பாண்டியன், நியூ ஜெர்ஸி திரு. பாலா, திரு. இளமாறன், திரு.கோசல், திரு. சிகாகோ சரவண குமார், மருத்துவர் திரு.சோம. இளங்கோவன், நியூயார்க் திரு. கதிர்வேல் குமாரராஜா, திரு. பாண்டி போன்ற பல புதிய நண்பர்களைப் பெற முடிந்தது. இந்தப் பயணம் புதிய உறவுகளையும் ஏற்படுத்தித் தந்தது. புதிய நண்பர்களோடு அறிமுகமாவதும் பழகுவதும் சிறந்த நூல்களைப் படிப்பது போன்றதுதான். மனிதர்களைத் தவிர்த்துவிட்டு இலக்கியம் இருக்க முடியாது. படித்துத் தீராத புத்தகம் மனித உறவு.

சினிமாக்காரர்களுக்கும் பட்டிமன்ற பேச்சாளர்களுக்கும் பிரபலங்களுக்கும் தருகிற முன்னுரிமையை எழுத்தாளர்களுக்குத் தருவதில்லை என்ற குற்றச்சாட்டு FeTNA மீதும் இருக்கிறது. வெகு மக்களுடைய ரசனையை ஒரு அமைப்பு கவனத்தில் எடுத்துக்கொள்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு அமைப்பு பலதரப்பட்ட மக்களின் கருத்துக்கும் ரசனைக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கிறது.

FeTNA நடத்தும் ஒவ்வொரு ஆண்டு விழாவும் தமிழ் மொழியை வளர்க்கிறதா, இல்லையா என்று தெரியாது. ஆனால், தமிழ் உணர்வை வளர்க்கிறது என்று நிச்சயம் சொல்லலாம். அதற்காகவே ஒவ்வொரு ஆண்டும் FeTNA விழா நடத்தப்பட வேண்டும்.

எந்த அறிவியல் பின்புலமும் இல்லாமல் அக்காலத்தில் எப்படி கிணறு அமைத்தார்கள்?

கிணறு அமைப்பது என்பது அத்தனை எளிதான காரியமில்லை. மனையின் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பகுதியில் அதிகளவு பச்சை பசேலென புற்கள் வளர்ந்திருந்தால், அந்த இடத்தில் கிணறு தோண்ட குறைந்த ஆழத்தில் நீரூற்று தோன்றும் என்கின்றனர் . சரி நீரூற்று இருக்கும் ஆனால் நல்ல நீரூற்று என அறிவது எப்படி ? நவதானியங்களை அரைத்து கிணறு வெட்ட வேண்டிய நிலத்தில் முதல் நாள் இரவு தூவி விடவேண்டும். அடுத்த நாள் கவனித்தால் எறும்புகள் இவற்றை சேகரித்து ஒரே இடத்தில் கொண்டுசென்று சேர்த்த அடையாளங்கள் , அதாவது தடயங்கள் இருக்கும். அந்த இடத்தில் கிணறு வெட்டினால் தூய சிறப்பான நன்னீர் கிடைக்கும் என்கிறார்கள் . சரி தூய நீரும் கண்டு கொண்டாயிற்று. கோடைகாலத்திலும் வற்றாத நீர் ஊற்று எந்த இடத்தில் இருக்கிறது என்று அறிவது எப்படி ? கிணறு வெட்ட இருக்கும் நிலப் பகுதியை நான்கு பக்கமும் அடைத்து விட்டு பால் சுரக்கும் பசுக்களை அந்த நிலத்திற்குள் மேய விட வேண்டும். பின்னர் அந்தப் பசுக்களை கவனித்தால் மேய்ந்த பின் குளிர்ச்சியான இடத்தில் படுத்து அசை போடும். அப்படி அவைத் தொடர்ந்து படுக்கும் இடங்களை நான்கு, ஐந்து நாட்கள் கவனித்து அந்த இடத்தில் தோண்டினால் வற்றாத நீரூற்றுக் கிடைக்கும்.

FeTNA Convention and beyond

- A Letter of Appreciation

Mr. Karthikeya Sivasenapathy

Chairman, Non Resident Tamils Welfare board

I wanted to share my incredible trip to the USA from 28th June to 20th July. It began with an enriching experience at Federation of Tamil Sangams of North America - FeTNA in Sacramento, California, where I had the pleasure of meeting Tamil people from all over the world particularly from the American community. Thanks to Mr. Bala Swaminathan and his colleagues for the opportunity and excellent arrangements. This stands as the world's largest congregation of the Tamils. Thanks to California State Treasurer Fiona Ma's Office (Ms.Fiona Ma, CPA, state treasurer, California)for the warm reception accorded to the Tamil people.

From there, I traveled to New Jersey for a memorable meeting with fellow Tamil enthusiasts. Thanks to Mr. Suresh of NJ for the hosting and arrangements.

Next stop was Georgia, Atlanta, where I had the opportunity to attend a Tamil association meeting, connecting with the vibrant Tamil community in that region. Thanks to Mr. Ravi Palaniappan and Mr. Swaminathan for hosting and helping in organizing the meet.

Thanks to our Indian Consul General in Georgia Atlanta, and Dr. Swati Vijay Kulkarni IFS who generously hosted a dinner inviting Georgia Senator Mr. Sheikh Rahaman along with a host of dignitaries. Dr. Swati Vijay Kulkarni is much respected by the Indian community in America. It was a celebration of sorts due to the positive news about the custody case of baby Visruth of Tennessee, Mississippi. Under instructions from the honorable chief minister of Tamilnadu, as chairman of the non resident Tamils welfare board, I had visited Memphis in March 2023 and chaired a meeting of Tamil associations, Reaction Team, volunteers, Mr. Kumar Nallusamy, FeTNA president Mr. Bala Swaminathan and Mr. Caldwell Velnambi our board member.

The journey then took me to Dallas, where I attended a significant gathering of Tamil people, fostering cultural exchange and unity. Thanks to Mr. Caldwell Velnambi, board member of the Non Resident Tamils Welfare Board, Mr. Mahesh, Mr. Dinakar, Mr. Sakthi and Mrs. Chitra Krishnaswamy. Thanks to Mr. Manohar and Mrs. Bhuvi Manoharan for a wonderful gathering of Tamil people along with Mr. Garga Chatterje. Following that, I was honored to be a part of the San Francisco Bay Area Tamil Manram member's meeting, engaging in meaningful discussions and celebrations, followed by a series of question and answer sessions.

Finally, I wrapped up my trip in North Carolina, participating in a heartwarming Tamil association meeting, filled with camaraderie and shared heritage.Thanks to Mrs. Kavitha pandian, Mr. Bharati Pandi, Reaction team Mrs. Lavanya, Mrs. Eshwari and family.

Throughout this journey, I couldn't help but notice the happiness and gratitude of the people of Tamilnadu origin towards the honorable Chief Minister of Tamil Nadu Chief Minister Mr. M. K. Stalin. His visionary initiative in establishing the Non-Resident Tamil Welfare Board has had a positive impact on the diaspora, creating opportunities for cultural preservation and mutual support.

I am immensely grateful for this experience, and I wanted to share my joy and appreciation with all of you. Let's continue to cherish our culture and heritage, promoting unity and progress in the Tamil community worldwide.

வேண்டாமை வேண்டுதல்!

கவிஞர் ஆரூர் தமிழ்நாடன்

மலர்வேண்டும்; முள்வேண்டும்;
இசைவேண்டும்; மௌனமும்
மனதிற்குள் நிறைய வேண்டும்!
உலர்த்துகிற வெயில்வேண்டும்
உயிர்நனைக்கும் மழைவேண்டும்;
உற்சாகப் பொழுது வேண்டும்!

அலர்தூற்றும் மனிதர்களும்
அன்புசெயும் மனிதர்களும்
அன்றாடம் வருதல் வேண்டும்!
பலர்வேண்டும் பலவிதமாய்;
சிலர்வேண்டும் சிலவிதமாய்;
பரவசமாய்ப் பழக வேண்டும்!

திசைவேண்டும் சிறகடிக்க;
சிறைவேண்டும் எனைமுடக்க;
தீர்ப்புகளோ கலந்து வேண்டும்!
தசைக்கேற்ற தசைவேண்டும்;
விசைக்கேற்ற விசைவேண்டும்;
தாளாத காதல் வேண்டும்!

அசைவேண்டும்; சீர்வேண்டும்;
அடிதொடைகள் மிகவேண்டும்;
அன்றாடம் எழுத வேண்டும்!
கசைவேண்டும்; அதன்மூலம்
காயங்கள் பெறவேண்டும்;
காயத்தைச் சுகிக்க வேண்டும்!

ஞானங்கள் பெறவேண்டும்;
சூன்யத்தில் விழவேண்டும்;
புத்தியினைத் துறக்க வேண்டும்!
ஈனமுள்ள இறைவேண்டும்;
இனிப்பான சாத்தானும்
என்னிடத்தில் வருதல் வேண்டும்!

மானமுடன் இருவரையும்
மதிப்பாக நடத்தி;அவர்
மானத்தை வாங்க வேண்டும்!
தானங்கள் தரவேண்டும்;
கையேந்தித் தொழவேண்டும்;
தத்துவத்தைப் புசிக்க வேண்டும்!

ஆன்றோரின் அரவணைப்பை
ஆசையுடன் பெறவேண்டும்;
அடுத்ததனை இழக்க வேண்டும்!
ஈன்றவர்கள் இதயத்தில்
பகலாக இருக்கும்நான்
இரவாகித் தவிக்க வேண்டும்!

மேன்மையினைப் பெறவேண்டும்;
தாழ்வுற்று விழவேண்டும்;
மின்மினியாய் உதிர வேண்டும்!
நான்பெற்ற நற்பெயரை
நடுத்தெருவில் விடவேண்டும்;
நானென்னைத் துறக்க வேண்டும்!

இருவேறு எல்லைக்குள்
இயங்குகிற வையத்தின்
இயல்புகளை அறிந்த தாலே;
திருப்பாதை தெருப்பாதை
என்றெல்லாம் பிரிக்காமல்
தினமும்நான் நடக்க வேண்டும்!

ஒருபோதும் எனைக்கடக்கும்
நொடிகளினை நானென்றும்
ஒதுக்காது செல்ல வேண்டும்!
இருக்கின்ற நாட்களிலே
எனைத்தேடி வருகின்ற
இரவுபகல் முழுதாய் வேண்டும்!

பிறப்பெனக்கு மிகவேண்டும்;
மரணமதும் வரவேண்டும்;
பிறவாமை கூட வேண்டும்;
சிறகுகளை சிலுவைகளைச்
சுமக்கின்ற வரம்வேண்டும்;
செந்தமிழ்தான் என்றும் வேண்டும்!

அறம்வேண்டும்; அநீதியை
அழிக்கின்ற திறன்வேண்டும்;
அணுவெல்லாம் போர்மை வேண்டும்!
நிறம்வேண்டும்; நிறமற்றுத்
திரிந்தலைய வேண்டும்நான்;
நிம்மதியும் துயரும் வேண்டும்!

கதவில்லா உலகத்தில்
கடிவாள மில்லாமல்
கவிபாடித் திரிய வேண்டும்!
மதங்கொண்ட மதமெதும்
மனம்பற்ற இடமின்றி
மனிதனாய் நடக்க வேண்டும்!

இதமான வியர்வையின்
இலக்கியம் நானென
இவ்வையம் சொல்ல வேண்டும்!
உதவாத புகழினை
உதறிநான் தனியனாய்
உலகெலாம் செல்ல வேண்டும்!

சோழர் படை பற்றிய சீன அறிஞர் கருத்து

"இந்நாடு மேற்கு நாடுகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தினிடம் ஏறக்குறைய அறுபது ஆயிரம் போர் யானைகள் உள்ளன. ஒவ்வொரு யானையும் 7 அல்லது 8 அடி உயரம் உள்ளது. போரிடும்போது யானைகளின் மீது அம்பாரிகள் அமைத்து அவற்றில் வீரர்கள் அமர்ந்து கொண்டு அம்பு எய்கின்றார்கள். அருகே உள்ளவர்கள் ஈட்டிகளால் தாக்குகின்றனர். வெற்றி அடைந்தவுடன் யானைகளுக்கு விருந்து கொடுத்து கௌரவிக்கின்றனர். சிலர் அவைகளுக்கு பொன்னாலான அம்பாரிகளைப் பரிசாகத் தருகின்றனர். ஒவ்வொரு நாளும் அரசர் முன் யானைகள் கொண்டுவரப்படுகின்றன."

சான்று; Chinese geographer Chau Ju-kua, writing in about 1178

வணக்கம் வட அமெரிக்கா போட்டிகள்

ஓவியப் போட்டி வெற்றியாளர்கள்

5-8 (காந்தள்)

Nafeesathul Misriyya Ahamed Anas - முதல் பரிசு
Aaradhya Arun - இரண்டாம் பரிசு

9-12 (முல்லை)

Sashtika Guru - முதல் பரிசு
Maaya Mathavan - இரண்டாம் பரிசு
Sridhar Mathavan - சிறப்புப் பரிசு

13-17(தாமரை)

Anjana Bharathiraja - முதல் பரிசு
Sunita Ganeshmoorthy - இரண்டாம் பரிசு
Jane Rayna Edwin Omesh - சிறப்புப் பரிசு

18 +(தாழை)

Arulselvi Amirrthalingam - முதல் பரிசு
Sivaranjani Baskaran - இரண்டாம் பரிசு
Kavitha Bharathiraja - சிறப்புப் பரிசு

கட்டுரைப் போட்டி வெற்றியாளர்கள்

5-8 (காந்தள்)

Nafeesathul Misriyya - முதல் பரிசு
Aaradhya Arun - இரண்டாம் பரிசு

9-12 (முல்லை)

Aradhana Arun - முதல் பரிசு
Sivanuja Sivalogeswaran - இரண்டாம் பரிசு
Sivaluxmy Sivalogeswaran - சிறப்புப் பரிசு

13-17 (தாமரை)

Sanjeev Rajesh - முதல் பரிசு
Anjana Bharathiraja - இரண்டாம் பரிசு

18 + (தாழை)

Arulselvi Amirrthalingam - முதல் பரிசு
Omkumar Mahalingam - இரண்டாம் பரிசு
Bharathiraja Ramachandrabose - சிறப்புப் பரிசு

கவிதைப் போட்டி வெற்றியாளர்கள்

5-8 (காந்தள்)

Aadhavan Senthilkumar - முதல் பரிசு
Meeyazhini Vignesh - இரண்டாம் பரிசு
Aaradhya Arun - சிறப்புப் பரிசு

9-12 (முல்லை)

Aradhana Arun - முதல் பரிசு
Adhiyan Bharathiraja - இரண்டாம் பரிசு

13-17 (தாமரை)

Anjana Bharathiraja - முதல் பரிசு

18 +(தாழை)

Manikandan Meenakshi Sundaram - முதல் பரிசு
Rama Arumugam - இரண்டாம் பரிசு
Arulselvi Amirrthalingam - சிறப்புப் பரிசு

கதைப் போட்டி வெற்றியாளர்கள்

5-8 (காந்தள்)

Nafeesathul Misriyya - முதல் பரிசு
Dhanvika Boopathy - இரண்டாம் பரிசு

9-12(முல்லை)

Iniya Senthilprabhu - முதல் பரிசு
Sruthi Karthik Iyer - இரண்டாம் பரிசு

18 + (தாழை)

Manikandan Meenakshi Sundaram - முதல் பரிசு
Kavitha A G - இரண்டாம் பரிசு
Ravi Narayanan - சிறப்புப் பரிசு

36வது பேரவை விழாவில் ஜெபர்டி நிகழ்ச்சி

பேரவையின் 36வது தமிழ் விழா சூன் 30, சூலை 1 மற்றும் சூலை 2, 2023 ஆகிய திகதிகளில் சாக்ரமெண்டோ, கலிஃபோர்னியாவில் இனிதே நடைபெற்றது. சூன் 30 “நட்சத்திர இரவு” நிகழ்ச்சியுடன் விழா துவங்கியது. அன்று, பேரவை வரலாற்றிலேயே முதன் முறையாக “தமிழ் இலக்கிய ஜெபர்டி” நிகழ்ச்சி நடத்தப்பட்டது. திருக்குறள், தமிழ் இலக்கியம், மற்றும் தமிழர் வரலாறு குறித்த கேள்விகள் தொடுக்கப் பட்டன.

இந்த நிகழ்ச்சி வட அமெரிக்காவில் தமிழ் பயிலும் மாணவர்களும் பெரியவர்களும் பங்கேற்கும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது. B T G Universal இந்நிகழ்ச்சியை வழங்கினர். முனைவர் பர்வீன் சுல்தானா அவர்கள் மிகச் சிறப்பாக நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். பேரவைத் தலைவர் முனைவர் திரு. பாலா சுவாமிநாதன் அவர்களின் முன்னெடுப்பில் திருமிகு பாலா பரமசிவம், திருமிகு சிவகாமி, திருமிகு இந்து ராவ், திருமிகு பிரபா பாலா, திருமிகு இராதிகா நாராயணன் மற்றும் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் இணைந்து தமிழ் ஜெபர்டி நிகழ்ச்சியை வடிவமைத்திருந்தனர்.

திருமிகு இந்து ராவ்

காவேரி, வைகை என இரு அணிகள் போட்டியில் பங்கேற்றன. போட்டியாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்று நிகழ்ச்சியை விறு விறுப்பாகக் கொண்டு சென்றார்கள். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பேரவை விழாவில் பெரியவர்களுடன் இணைந்து மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் அதிக அளவில் பங் கேற்பார்கள் என்பது ஒருங்கிணைப் பாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

Federation of Tamil Sangams of North America

Proudly presents

Women Achievers Award-2023

36th Annual FeTNA convention June 30, July 1-2,2023 Sacramento

Congratulations
Kanagalakshmi Nagarajan

Congratulations
Nithyapriya Muthuraman

Congratulations
Preetha Prabhakar

Congratulations
Senthamarai Prabhakar

Congratulations
Dr. Selvi Senthamizh Murugesan

Congratulations
Shanmugaprathiba Dhanapal

சார்லட் தமிழ்ச் சங்கம்

தமிழில் பல நெடும் புதினங்கள், குறும் புதினங்கள், சிறுகதைகள், பயணக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு, இலக்கிய ஆய்வு, குழந்தை களுக்கானப் பேசும் புத்தகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ள தமிழ் இலக்கிய உலகத்தின் மூத்த எழுத்தாளர் திருமிகு சிவசங்கரி அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை, மே 26 2023 வெள்ளிக்கிழமை அன்று சார்லட் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய வட்டக் குழு சிறப்பாக நடத்தியது. நிகழ்வில் எழுத்தா ளர் சிவசங்கரி அவர்களுக்கு சார்லட் தமிழ்ச் சங்கம் சார்பாக நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை நடத்திய வணக்கம் வட அமெரிக்கா, தமிழ் கூறும் தலைமுறை மற்றும் குறள் தேனீ போன்ற போட்டிகளில் பல சார்லட் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் குறிப்பாக, சாக்ரமெண்டோ, கலிபோர்னியா நகரில் சூலை 1,2 மற்றும் 3 ஆகிய திகதிகளில் நடந்த வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 36 – வது ஆண்டு விழாவில் வணக்கம் வட அமெரிக்கா போட்டியின் இறுதிச் சுற்றில் பங்குபெற்று பரிசு வென்ற செல்வி சஹானா சதீஷ்குமார் (பாட்டு), செல்வி ஸ்ருதி கார்த்திக் ஐயர்(நடனம்), செல்வன் ஷ்ரேயாஸ் சதீஷ்குமார் (பாட்டு) சார்லட் தமிழ்ச் சங்கத்திற்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்தது.

36–வது பேரவை விழாவில் சார்லட் தமிழ்ச் சங்கத்தின் மேனாள் தலைவர் மற்றும் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் திருமதி செந்தாமரை பிரபாகர் அவர்கள் இந்த ஆண்டிற்கான ஆற்றல் மிகு பெண்கள் சாதனையாளர் விருது பெற்றது கூடுதல் சிறப்பாக அமைந்தது.

ஜூலை 15, 2023 அன்று திரு.பவா செல்லதுரை மற்றும் திருமதி. ஷைலஜா பவா செல்லதுரை அவர்களுடன் ‘கதை கேட்கலாம், கதை பேசலாம்” நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. இந்த நிகழ்வில் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு திரு.பவா செல்லதுரை மற்றும் திருமதி ஷைலஜா ஆகியோருடன் உரையாடினார்கள் . சார்லட் இலக்கிய வட்டத்தின் சார்பாக இரவு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இலக்கிய இரவு அனைவரும் நினைவு கொள்ளும் விதமாக அமைந்தது என்றால் அது மிகை இல்லை .

2023 ஆம் ஆண்டிற்கானக் கடைசி காலாண்டில் முதன் முறையாகக் கைப்பந்து போட்டி நடத்த திட்டமிட்டுள்ளோம். அதே போல் ஆண்டு தோறும் நடைபெறும் கோடைக் கொண்டாட்டம் மற்றும் இளையோருக்கானத் தன்னார்வலப் பணி செய்யும் வாய்ப்பினை வழங்கும் நிகழ்வு ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்



சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தில் மே 14 அன்று பாடகர் மனோவின் 'மனோ 25k ' என்ற மாபெரும் இசை நிகழ்வு சிறப்பாக நடந்தது.

ஒவ்வொரு வருடமும் விடுமுறையின் போது குழந்தைகளில் இருந்து பெரியோர் வரை அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அவ்வாறே ஜூன் ஆரம்பித்து இம்மலர் வெளிவரும் வரை போட்டிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும், இந்தியாவில் மாநிலங்களுக்கிடையே நடப்பது போல, அமெரிக்காவிலும் மாநிலங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடக்கவுள்ளன.

ஜூன் 30, ஜூலை 1 ,2 தேதிகளில் சாக்ரமெண்டோவில் நடந்த பேரவை விழாவிற்கு சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தில் இருந்து 22 பேர் கலந்து கொண்டனர். வரும் 2024 ஆம் ஆண்டு சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் பேரவைத் தமிழ் விழாவை எடுத்து நடத்த உள்ளது என மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

இங்கு ஆகஸ்ட் முதல் இரு வாரங்கள் 'இயல்-இசை-நாடகப் பயிற்சிப்பட்டறை' மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும் மடிக்கணினி வழங்குதல்,உணவு வங்கியில் தன்னார்வலப்பணி என இளைஞர் அணியின் செயல்பாடுகளும் பாராட்டத்தக்கது. ஆகஸ்ட் 15 ஆம் தேதி, இச்சங்கத்தின் மல்லிகை மலரின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இம்மலரின் அகவை ஆறு! எதிர்வரும் விடுமுறை நாட்களில் நடக்கவிருக்கும் முக்கியக் கொண்டாட்டமான 'சுற்றுலா' விற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தரணியெங்கும் பரவும் தமிழர் மருத்துவம்

திருமிகு செந்தாமரை பிரபாகர்

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவையும் (பெட்னா), சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்திய 36வது பேரவையின் தமிழ் விழா கலிஃபோர்னியாவின் சாக்ரமெண்டோ நகரில் 2023 ஆம் ஆண்டு ஜூன் 30 முதல் ஜூலை 2 வரை நடைபெற்றது. கோலாகலமாக நடைபெற்ற இந்த விழாவில் சுமார் 2000 க்கும் அதிகமான தமிழர்கள் அமெரிக்கா, கனடா மற்றும் இந்தியாவில் இருந்து சங்கமித்திருந்தார்கள். இதில் தமிழ் தொடர்பான பல துறைகளுக்கு இணை அமர்வுகள் இருந்தது. அதில் வட கரோலைனாவில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனமான "உலகளாவிய சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம்" (Global Center For Siddha Medicine and Research - GCSMR) சார்பாக மருத்துவர் உமா செந்தில் மற்றும் மருத்துவர் அருள் அமுதன் ஆகியோர் பேரவை விருந்தினர்களாக பங்கேற்ற இரண்டு இணை அமர்வுகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

முதலாவது இணை அமர்வு சூலை 1 ஆம் திகதி நடைபெற்றது. பேரவையின் சிறப்பு குழந்தைகளுக்கானக் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த இணை அமர்வில் "சிறப்புக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த மருத்துவ முறைகள்" என்ற தலைப்பில் அமைந்தது. சிறப்பு விருந்தினராக இசைக்கலைஞர் பத்மபூஷண் திருமதி. சுதா ரகுநாதன் அவர்கள் கலந்து கொண்டார்கள். முதலில் அபுதாபி நகரிலிருந்து வந்த மருத்துவர் உமா செந்தில் உரையாற்றினார். இவர், அடிப்படையில் BSMS என்ற சித்த மருத்துவ படிப்பும் நவீன மருத்துவ படிப்பில் M.D. பட்டமும், ஒருங்கிணைந்த மருத்துவத்தில் அனுபவமும் உடையவர். ஆட்டிசம் போன்ற நோய்களுக்கான காரணங்களையும், அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைப் பற்றியும், அதற்கு ஒருங்கிணைந்த மருத்துவம் மூலமாக எப்படி சிகிச்சை அளிக்க முடியும் என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

அடுத்து பேசிய பத்மபூஷண் திருமதி.சுதா ரகுநாதன் அவர்கள், இசை மூலமாக எப்படி மனிதனின் மூளையின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை விவரித்தார். அறிவியல் அடிப்படையில், இசையைக் கேட்பதின் மூலமாகவும், பாடல்களை பாடுவதன் மூலமாகவும், இசைக் கருவிகளை இசைப்பதன் மூலமாகவும், பல நோய்கள் குணமாவதை விளக்கினார். ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு நோயைத் தீர்க்கும் தன்மை இருப்பதை விவரித்தார்.

அடுத்து பேசிய மருத்துவர் அருள் அமுதன் அவர்கள் M.D. சித்த மருத்துவமும், MSc. PhD நவீன மருந்தியல் படிப்பும் படித்தவர், இந்தியாவில் உள்ள மணிப்பால் பல்கலைகழகத்தில் சித்த மருத்துவத் துறையின் தலைவராக இருக்கும். இவர், தமிழரின் சித்த மருத்துவத்தில் 4448 நோய்களைப் பற்றிய குறிப்புகள் இருப்பதாகவும், மாந்தம், கணை, வலி, சன்னி, கிரிகை போன்ற பல நோய்களின் கீழ் சிறப்பு குழந்தைகளுக்கான மருந்துகளை சித்த மருத்துவச் சுவடிகள் விவரிப்பதாகவும் கூறினார். குழந்தை தாயின் கருப்பையில் இருக்கும்போதே சில சித்த மருந்துகள் கொடுப்பதால் ஆரோக்கியமாக வளரும் என்றார். யோகா, தொக்கணம், இலைக்கிழி, தளம், நசியம், உள் மருந்துகள் எனப் பல சித்த மருந்துகளைப் பயன்படுத்தி, சிறப்புக் குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் தரலாம் எனவும் குறிப்பிட்டார். பின் பெற்றோருக்கானக் கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இரண்டாவது நிகழ்வு சூலை 2 ஆம் திகதி அன்று நடைபெற்றது. “தரணியெங்கும் பரவும் தமிழர் மருத்துவம்“ என்ற தலைப்பில் இந்த இணை அமர்வு நடந்தது. முதலில் பேசிய இதயவியல் நிபுணர் டாக்டர்.ஜானகிராமன் அவர்கள், தமிழரின் பாரம்பரிய சித்த மருத்துவம், சீன மருத்துவத்தைப் போல உலக அளவில் தமிழர்கள் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை விளக்கினார். உலகின் முன்னணி மருத்துவ பல்கலைகழகங்களில், சித்த மருத்துவப் பிரிவு அமைக்க வேண்டும். அதன் முதற்கட்டமாக, மணிப்பால் பல்கலைக் கழகத்தில் அமைய இருக்கும் மணிப்பால் சித்தா இருக்கைக்கு அனைவரும் நன்கொடை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

GCSMR அமைப்பின் செயலாளர் திருமதி செந்தாமரை பிரபாகர் அவர்கள் இந்த அமைப்பின் நோக்கம் ,செயல்பாடுகள் பற்றி விளக்கினார். மேலும் மணிப்பால் சித்தா இருக்கை அமைக்க இரண்டரை கோடி பணம் தேவைப்படுவதாகவும், நாம் கொடுக்கும் பணத்துக்கு இணையான பணத்தை பல்கலைக்கழகம் கொடுத்து சித்தா ஆராய்ச்சிகள் செய்வதாகவும் கூறினார்.

‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றியுணின்’ என்ற திருக்குறளில் யாக்கை என்று குறிப்பிடுவது *genetic phenotype* எனப்படும் ஒருவரின் உடல் அமைப்பைப் பற்றியும் இந்த யாக்கை ஒவ்வொருவருக்கும் மாறுபடும் என்றும், அதற்கேற்ற உணவுகள் உண்டால் நோயின்றி வாழலாம். என்பதையும் சித்த மருத்துவர் அருள் அமுதன் அவர்கள் விளக்கினார். இந்த யாக்கையைக் கண்டுபிடிக்க கேள்வித்தாள்கள் எல்லோருக்கும் கொடுக்கப் பட்டது. தங்கள் யாக்கை, வாதமா, பித்தமா, கபமா என்பதை ஆர்வமுடன் தெரிந்து கொண்ட மக்கள், அதற்கான நோய்த் தடுப்பு முறைகளையும் கேட்டறிந்தனர்.

அடுத்து தென்கரோலினா பல்கலைகழகத்தில் ஆராய்ச்சியளாராக இருக்கும் முனைவர். சுந்தர் பாலசுப்ரமணியன் அவர்கள் அனைவருக்கும் திருமூலரின் பிராணாயாமப் பயிற்சியளித்தார். நவீன மருந்துகள் உட்கொள்ளும் புற்றுநோயாளிகள், பிராணாயாமத்தை பயிற்சி செய்வதன் மூலம் புற்றுநோயைத் தடுக்கும் TNF-போன்றவை உடலில் சுரப்பதால், நன்மை அடைகின்றனர் என்ற அவரது ஆராய்ச்சி முடிவை விவரித்தார்.

அடுத்து பேசிய மருத்துவர். உமா செந்தில்

அவர்கள் ஒருங்கிணைந்த மருத்துவத்தில் சித்த மருத்துவத்தின் நிலை என்ன என்பது பற்றிப் பேசினார். ஒரே ஒரு மருத்துவ முறையை மட்டும் வைத்துக்கொண்டு, உலகில் உள்ள அத்தனை நோய்களையும் கட்டுப்படுத்துவது இயலாத காரணத்தால், பாரம்பரிய மருத்துவ சிகிச்சை முறைகளையும் சேர்த்து பயன்படுத்துதலே ஒருங்கிணைந்த மருத்துவம் ஆகும். இந்த முறையானது தற்போது அமெரிக்காவின் பல மருத்துவக் கல்லூரிகளிலும் அறிமுகமாகி உள்ளது. அதனைத் தொடர்ந்து, முத்திரைகளின் செய்முறை களை விளக்கிக் காட்டினார்.

பின்னர் பேசிய மருத்துவர் அருள் அமுதன், GCSMR இன் துணையுடன் மணிப்பால் பல்கலைகழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மணிப்பால் சித்தா இருக்கையைப் பற்றி பேசினார். கர்நாடக மாநிலத்தில், முதன் முதலாக சித்த மருத்துவத்திற்கென அரசு அங்கீகாரம் வாங்கித் தந்த மணிப்பால் பல்கலைக்கழகம், சித்தா வெளிநோயாளிகள் சிகிச்சை பிரிவு, முனைவர் பட்டப் படிப்பு இவற்றையும் ஆரம்பித்துள்ளது. தேசிய சித்த மருத்துவ நிறுவனத்துடன் இணைந்து ஒருங்கிணைந்த சித்த மருத்துவ புறநோயாளிகள் பிரிவையும் ஆரம்பித்துள்ளது. அட்லாண்டாவில் உள்ள மோர்ஹவுஸ் மருத்துவக் கல்லூரியுடன் ஏற்படுத்தியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, அமெரிக்கா மற்றும் கனடாவில் நாலாம் வருடம் மருத்துவம் பயிலும் மாணாக்கர்கள், ஒரு மாதகாலம் இந்தியா வந்து சித்த மருத்துவத்தைப் பற்றிப் படிக்க முடியும். கடந்த ஆண்டு முதல் மாணவர்கள் வர ஆரம்பித்து விட்டனர் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்தார்.

திருமதி. மல்லிகா ஜானகிராமன் அவர்கள் 10 லட்சம் உருபாயை நன்கொடையாக அளித்த பணத்தை வைத்துக் கொண்டு, உலகிலேயே முதன்முதலாக சித்தா வர்மம் சிகிச்சைக்கான 6 மாத கால படிப்பு ஆரம்பித்துள்ளதைப் பகிர்ந்துகொண்டார். இதன் படி, மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையில் பணியாற்றும் நபர்கள் இப்படிப்பைப் படிக்க 6 மாதக் காலம் மணிப்பால் பல்கலைக் கழகத்தில் தங்கி இருக்க வேண்டும். பலர் தனித்தனியாக கொடுத்த நன்கொடையை வைத்துக் கொண்டு 53 ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டதைக் கூறினார். அதைத் தொடர்ந்து, வர்ம மருத்துவத்தைப் பற்றிய அறிமுக வகுப்பும், எளிதில் பயிற்சி செய்யக் கூடிய சில வர்மப் புள்ளிகளும் விளக்கிக் காட்டப்பட்டது.

இந்த இரண்டு அமர்வுகளையும், GCSMR அமைப்பின் செயலாளர் திருமதி செந்தாமரை அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தி, நன்றியுரையையும் வழங்கினார். GCSMR பற்றிய விவரங்களை https://globalcenterforsiddha.org/ என்ற இணையதள முகவரியில் பார்க்கலாம். மின்னஞ்சல் முகவரி-

அட்டைப்பட ஓவியர் பற்றி

இலையுதிர் மலரின் அட்டைப்படத்தை அலங்கரிக்கும் ஓவியத்தை அருவி இதழுக்காக வரைந்து அளித்தவர் அருவி மலர்க் குழுவின் துணை ஆசிரியர் மற்றும் ஓவியர் திருமிகு ஷீலா ரமணன் ஆவார். இவர் டெக்சாஸ் மாநிலம் சான் ஆண்டோனியோவில் வசிக்கிறார். இவர் ஒரு எழுத்தாளரும் கூட. இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை மணிமேகலை பிரசுரம் வாயிலாக வெளியிட்டுள்ளார். இவருடைய கதைகளில் ஒன்று வாசிங்டன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 'அறிவொளி விருது' பெற்றுள்ளது. இவர் தமிழ் என்டர்டெய்ன்மெண்ட் கனடா தொலைக்காட்சியில் "மனம் திறந்து' என்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஐம்பது வாரங்களாக வெற்றிகரமாக வழங்கியுள்ளார். அரசன் ரேடியோவில் தொகுப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். கடந்த ஆறு ஆண்டுகளாக தினமலர் நாளிதழின் வெளிநாட்டு(NRI) நிருபராகவும் பணியாற்றி வருகிறார். மொழியியல் மற்றும் செய்தி இயக்குனராகவும் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தில் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், அத்தமிழ்ச் சங்கம் வெளியிடும் "மல்லிகை மலர்" இதழின் முதன்மை ஆசிரியராகவும் உள்ளார்.

ஷீலா ரமணன்

37வது பேரவை விழா

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 வது தமிழ் விழாவிற்கு “சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்” உங்களை அன்புடன் அழைக்கின்றது.

திருமிகு ஷீலா ரமணன்

இதயத்தால் பேசப்பெற்று இதயத்தால் உணரவைக்கும் மொழி! செழுமையும் வளமையும் எளிமையும் கொண்ட ஆதி மொழி! வாழ்வுக்கே இலக்கணம் வகுத்த இத்தகைய வண்டமிழ் மொழியில், தமிழரின் பெருமையைப் பறைசாற்றுகின்ற பற்பல மரபு சார்ந்த கலை நிகழ்ச்சிகள்,பட்டிமன்றம், இயல்-இசை-நாடகம்-நாட்டியம் என கண்களும் காதுகளும் மகிழ்வுறவும், மண்மணம் மாறா நம் ஊர் சார்ந்த உணவு உண்டு ரசிக்கவும், நம் தமிழ் உறவுகளை ஒருசேர ஓர் அரங்கில் கண்டு உறவாடி மகிழவும் நமது பேரவை வருடாவருடம் ஆவன செய்கின்றது. வரும் 2024 ஆம் ஆண்டில் டெக்சாஸ் மாநிலம் சான் ஆண்டோனியோவில் உள்ள 30 வருட பாரம்பரிய மிக்க சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம், 37 வது பேரவை விழாவினைப் பெருமையுடன் எடுத்து நடத்த உள்ளது. வாருங்கள் சான் ஆண்டோனியோவைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

வரலாற்றுச் சிறப்பு:

1821 இல் மெக்சிகோ சுதந்திரம் அடைந்த பிறகு 1836 இல், ஆங்கிலோ-அமெரிக்கர்கள் டெக்சாஸ் குடியரசினைப் பெற்றனர். 1845 இல் டெக்சாஸ் அமெரிக்காவில் இணைக்கப்பட்டு, தனி மாநிலமாக மாறியது.

சான் ஆண்டோனியோ 'ரிவர் வாக்':

உலகப் புகழ்பெற்ற 15 கல் நீள நகர்ப்புற நீர்வழிப்பாதை! இந்த நீளமான நதி நடை, சான் ஆண்டோனியோவில் கட்டாயம் பார்க்க வேண்டிய ஒன்று. இருபுறமும் அழகான சைப்ரஸ் மரங்கள், கடைகள், அருங்காட்சியகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் டெக்ஸ்-மெக்ஸ் உணவகங்கள் நிறைந்த ஆற்றங்கரைப் பாதை கொண்ட இந்த நதியில், படகில் பயணம் செய்யும் வசதியும் உள்ளது.



டவர் ஆஃப் அமெரிக்கா:

இங்குள்ள புகழ் பெற்ற அமெரிக்க கோபுரத்தின் உச்சியில் 190 மீ (623 அடி) உயரத்தில் மின் இயங்கு ஏணி மூலம் மேலே சென்று, சான் ஆன்டோனியோ நகரின் அழகிய தோற்றத்தைக் காணலாம்.

அலமோ: அலமோ போரின் வரலாற்றுச் சாட்சி!

அலமோ என்பது 18 ஆம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மிஷனரிகளால் நிறுவப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்பானிஷ் பணி மற்றும் கோட்டை வளாகம். இது 1836 ஆம் ஆண்டில் அலமோ போரின் தளமாகும். இது மட்டுமன்றி டெக்சாஸ் புரட்சியின் ஒரு முக்கிய நிகழ்வுச் சின்னமாகும்.

சிஸ்டர் சிட்டி:

சான் ஆண்டோனியோ-அமெரிக்கா மற்றும் சென்னை-இந்தியா ஆகிய இரண்டு நகரங்களும் சகோதரி நகரமாகும்(சிஸ்டர் சிட்டி). சிஸ்டர் சிட்டியாக செயல்பட்டுக் கொண்டு, எளியோருக்கு தேவையான உதவிகள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல சுவாரஸ்யங்களையும் அன்பான தமிழ் மக்களையும் கொண்டது தான் சான் ஆண்டோனியோ!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 வது தமிழ் விழா 2024 ஆம் ஆண்டு சான் ஆண்டோனியோவில் நடக்க உள்ளது என்பதை மீண்டும் அனைவருக்கும் கூறிக் கொண்டு, அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்!

தமிழ் வாழ்க! அறம் வாழ்க!

நடுகல்

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு வீர மரணமெய்திய வீரனின் நினைவாக அமைக்கப்படுவதே நடுகல்லாகும். பின்னாளில் இது வழிபடும் தெய்வமாக உருப் பெற்றது. முதலில் பெரிய கல் ஒன்றைக் கொண்டு வந்து அந்த வீரனின் உருவம் செதுக்குவர். அருகில் ஈட்டிகளும் கேடயங்களும் அரண் போல ஊன்றப்பட்டிருக்கும். மாய்ந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி மராமத்து அடியில் நட்டு தெய்வமாக வழிபடுவர். இக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் மதுரை வீரன், கருப்பன், முனியன் முதலிய சிறு தெய்வங்கள் நடு கல்லின் உருமாறிய அல்லது வளர்ச்சி பெற்ற நிலை எனக் கூறலாம்.

கலைச்சொற்களின் செந்தரம்

அறிவியலிலும் தொழில் நுட்பங்களிலும் மருத்துவம், சட்டம் போன்ற தொழிற்றுறைகளிலும் அரசியல், பொருளியல், சமூகவியல் போன்ற மனிதக்கலைகளிலும் பயன்படும் கருத்துகளுக்குத் திட்டவட்டமான துல்லியமான கலைச்சொற்கள் இருக்கவேண்டியது அவசியம். பள்ளிப்பாடநூல்கள், விக்கிப்பீடியா, ஊடகங்கள், தனியார் பதிப்பிக்கும் அறிவியனூல்கள் போன்ற எல்லாவற்றிலும் ஒரு கருத்துருவுக்கு ஒரே கலைச் சொல் என்ற வழக்கம் நடைமுறைக்கு வரவேண்டும்.

தமிழ் வழியில் கற்பிக்கும் அனைத்துப் பள்ளிகளிலும், வகுப்புகளிலும், பாடநூல்களிலும் செந்தரமான கலைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். நீட்டுத்தேர்வு, கூட்டுத் தேர்வு போன்ற மையமாக்கிய தேர்வுகளிலும் அவற்றுக்கு நிகரான மாநில மட்டத்திலான தேர்வுகளிலும் இந்த சீரான சொற்களே இடம் பெறுவது மிகவும் அவசியம்.

அறிஞர்களை ஒன்றுசேர்த்து முனையுறல்களை தவிர்த்து பெரும் பான்மையோருக்கு பெரும்பாலும் ஏற்புடையதாகும் ஒரு உகமத்தீர்வாக சில வழியுரைகளைப் பின்பற்றி ஒரு கலைச் சொற்பட்டியலை உண்டாக்குவது இந்தத் திட்டப்பணியின் நோக்கம். இவ்வாறு நான் வந்தடைந்த உகமத்தீர்வையும் வழியுரைகளையும் இந்த நூலில் காரண ஏரணங்களுடன் விளக்குகிறேன். பிறகு அந்த வழியுரைகளின் அடிப்படையில் நான் சேகரித்து சீரமைத்த நூறாயிரத் துக்கும் மேற்பட்ட கலைச் சொற்களடங்கிய பட்டியலை இதனுடன் வழங்குகிறேன்.

திரு. செ. கோட்டாளம்

மிகப்பல அறிஞர்கள் கலைச் சொற்களை ஆக்கியிருக்கின்றனர். பல கலைச்சொல்லகராதிகள் ஏற்கனவே இருக்கின்றன. அவற்றிலுள்ள குறைகளை எடுத்துரைத்து அந்தக் குறைகள் இல்லாததும் கலைத்துறைகளில் பயன்படுவதற்கான பண்புகள் இருப்பதுமான ஒரு பட்டியலை உருவாக்கும் முயற்சியில் சொற்களை தொகுத்தும் தேவையான போது ஆக்கியுமிருக்கிறேன். கலைச் சொற்களுக்கு துல்லியம், திட்டவட்டம், ஒருத்துவம், குறிப்புமை, இயைபுமை ஆகிய பண்புகள் இருக்க

பின்னொட்டுகள்		சான்றுகள்	
ஆங்கிலம்	தமிழ்	ஆங்கிலம்	தமிழ்
ectomy	நீக்கல்	ostectomy, pancreatectomy	எலும்புநீக்கல், கணையநீக்கல்
otomy	துமிப்பு	myotomy, hysterotomy	தசைத்துமிப்பு, கருப்பைத்துமிப்பு
plasty	தேற்றல்	keratoplasty, enteroplasty	கருவிழித்தேற்றல், குடற்றேற்றல்
rrhaphy	தையல்	enterorrhaphy, hepatorrhaphy	குடற்றையல், கல்லீரற்றையல்
pexy	கட்டல்	colopexy, nephropexy	பெருங்குடற்கட்டல், சிறுநீரகக்கட்டல்
ostomy	திறத்தல்	nephrostomy, salpingostomy	சிறுநீரகத்திறத்தல், விரிகுழற்றிறத்தல்
oscopy	நோக்கல்	gastroscopy, uteroscopy	இரைப்பைநோக்கல், கருப்பைநோக்கல்
tripsy	உடைப்பு	cholelithotripsy, sympathicotripsy	பித்தக்கல்லுடைப்பு, பரிவுநரம்புடைப்பு
centesis	துளைப்பு	amniocentesis, thoracentesis	பனிக்குடத்துளைப்பு, மார்புத்துளைப்பு

வேண்டும். பட்டியலிலுள்ள சொற்களிடையே தன்னியைபு நிலவுமாறு சொற்களைச் சீரமைத்திருக்கிறேன்.

சான்றாக, மருத்துவத்தின் ஒரு துறையான அறிவியலில் மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பலவிதமான சிகிச்சைகளை அட்டவணை காட்டுகிறது.

-ectomy, -otomy, -plasty ஆகிய ஒவ்வொரு பின்னொட்டிலும் முடியும் 200க்கும் மேற்பட்ட சொற்கள் சொற்பட்டியலில் அடங்குகின்றன.



மறுபக்கமாக, enterectomy, enterotomy, enterostomy, enterocentesis, enteroplasty போன்ற அறுவியற் சொற்களும் entero- என்று தொடங்கும் வேறு பல சொற்களும் தமிழில் குடல் என்று தொடங்குகின்றன.

மேலும் விவரமாக அறிய, இந்த இலவச மின்னூலை (https://tinyurl.com/kalaiSorkal) பதிவிறக்குங்கள். கிண்டிலிலோ (https://tinyurl.com/KalaiSorkalKindle) அச்சுநூலாகவோ (https://tinyurl.com/KalaiSorkalPrint) படிக்க விரும்புவோர் ஒரு சிறு விலைக்கு பெறலாம். முழு சொற் பட்டியலை இங்குள்ள (https://tinyurl.com/neechalkaran) தேடுபொறியால் மேலோடலாம்; உங்கள் திறனாய்வுக்கோ ஆராய்ச்சிக்கோ பகுப்பாய்வுக்கோ தேவையானால் எகுசல்வடிவில் இங்கிருந்து(https://tinyurl.com/KalaiSorkalExcel) பதிவிறக்கலாம். என்னை jkottalam@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்புகொண்டும் இவற்றைப் பெறலாம்.

உண்டாட்டு

உண்டாட்டு என்பது பகைவரை வென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்கள் வெற்றிக் களிப்பில் மது உண்டு ஆடுவதாகும். ஊனும் கள்ளும் உண்பதை ‘உண்டு’ என்பது காட்டுகிறது. வேந்தன் தகுதி அறிந்து சிறப்புச் செய்தமையாலும் கள்ளுண்டமையாலும் மனம் களிப்பெய்தி ஆடியதை ஆட்டு என்பது சுட்டுகிறது.

கல்லிலே கலைவண்ணம்



கனேடியத் தமிழர் பேரவை கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் உள்ள பெடெக் நகரத்தில் புகழ் பெற்ற தமிழ் அறிஞர் ஜி.யு. போப்பை கௌரவிக்கும் வகையில் அவரது உருவச் சிலையைத் திறந்து வைத்துள்ளது.

பெடெக் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் கனேடிய மண்ணின் முதல் தமிழறிஞரான ஜி.யு.போப்புக்கு, அவரது பிறந்த மண்ணில் அவரது உருவச் சிலையைத் திறந்து வைத்ததன் மூலம் கனேடியத் தமிழர் பேரவையானது வரலாறு ஒன்றைப் படைத்துள்ளது.

தமிழ் மொழிக்கு ஜி.யு.போப் ஆற்றிய பங்களிப்புகள் அசாதாரணமானவை என்பதாலேயே அவர் தமிழ் அறிஞர்கள் மத்தியில் போற்றப்படும் ஒருவராகக் கருதப்படுகின்றார். இந்த உருவச்சிலை வட அமெரிக்காவில் ஒரு தமிழ் அறிஞருக்காக நிறுவப்பட்டுள்ள முதலாவது நினைவுச் சின்னமாகும். இது போப்பின் பணியின் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக்காட்டுகிறது. 1968ஆம் ஆண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது ஜி.யு. போப்பை கௌரவிக்கும் வகையில் தமிழக அரசு சென்னையில் அவரது உருவச்சிலை ஒன்றை அமைத்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

1980 மற்றும் 1990களில் இலங்கையிலிருந்து பேரழிவைத் தந்த கறுப்பு ஜூலை போன்ற தமிழர் எதிர்ப்பு கலவரங்களைத் தொடர்ந்து கனடாவுக்கு கணிசமான தமிழர்கள் குடிபெயர்ந்த காரணத்தால் இப்போது ஆசியாவுக்கு வெளியே மிகப்பெரிய புலம் பெயர் தமிழ்ச் சமூகமாகக் காணப்படுகின்றது. தற்போது 300,000க்கும் அதிகமான தமிழர்கள் கனடாவில் வசிக்கின்றனர். அவர்களில் தொழில் முனைவோர், தொழில் வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் உள்ளனர். இவர்களின் வெற்றியானது தமிழர் சமூகத்தின் துடிப்பானதும் செழிப்பானதுமான தன்மையை பிரதிபலிக்கிறது. இவைக்கு மேலாக கனேடியத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பதற்காகத் தமிழ் இருக்கையை நிறுவினர்.

ஜி.யு.போப்பின் 200ஆவது பிறந்த நாளை நினைவுகூறும் வகையிலும் தமிழ் மொழிக்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பை அங்கீகரிக்கும்

வகையிலும், கடந்த 2020 ஆம் ஆண்டில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க கனேடியத் தமிழர் பேரவை உறுதியளித்தது. இருப்பினும், கொவிட் 19 தொற்று நோய் காரணமாக திட்டத்தை நிறைவு செய்யும் முயற்சிகள் அனைத்தும் 2023 ஆம் ஆண்டு சூலை வரை காலம் தாழ்த்தி செயல்பட்டது.

ஏப்ரல் 24, 1820 அன்று பிறந்த போப், தனது 19ஆவது வயதில் மிஷனரி சேவையில் சேர்ந்து தென்னிந்தியாவுக்குச் சென்றார். மொழிகள் மீதான அவரது ஈர்ப்பு அவரைத் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வழிவகுத்தது. மேலும் அவர் தென்னிந்தியாவில் இருந்த காலப்பகுதியில் அவருக்கு தமிழ் மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் செழுமையையும் வெளிப்படுத்தியது. போப் தமிழ் இலக்கியத்தில் முக்கிய பங்களிப்புகளை வழங்கும் ஒருவராக மாறினார். அத்துடன் அவர் பல முக்கியமான தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பன்னிரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.

1886இல் திருக்குறளை "the sacred kurral" என்ற பெயரில் மொழி பெயர்த்து வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து 1893இல் நான்கு வரிகள் கொண்ட 'நாலடியார்' என்னும் தமிழ் நூலையும் 1890இல் திருவாசகத்தையும் மொழி பெயர்த்தார். அதனைத் தொடர்ந்து போப் இங்கிலாந்திலுள்ள புகழ்பெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழின் செழுமையான பாரம்பரியத்தை ஆழமாகப் போற்றும் வகையில் தமிழ் அறிஞர் திருவள்ளுவரின் ஞானத்தை உலகம் முழுவதும் அறிமுகப்படுத்துவதில் போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பு முக்கிய பங்கு வகித்தது.

தனது வாழ்நாளில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளைக் கழித்த தமிழ்நாட்டில், அவர் 'போப் ஐயர்' என்றும் அன்புடன் அழைக்கப்பட்டார். பிப்ரவரி 11, 1908 அன்று தனது 88ஆவது வயதில் அவர் இம் மண்ணுலகை விட்டு நீங்கினார்.

வரலாற்றின் முக்கியத்துவமான நிகழ்வு போப்பின் நினைவுச்சின்னம் கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நினைவுச் சின்னத்தை நிறுவதலுக்கான பரப்புரைகளில் தலைமை தாங்கியவரும் கனேடிய தமிழர் பேரவையில் இதற்கு முன்னர் தலைவராகப் பதவி வகித்தவருமான சிவன் இளங்கோ இந்நிகழ்வில் உரையாற்றினார்.

'கனடாவிலுள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பெடக் எனும் இடத்தில் 1820ஆம் ஆண்டு பிறந்து இந்திய தமிழ்நாட்டில் 40 வருடங்களைச் செலவிட்டு அரிய தமிழ் நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் மொழிக்கு அசாதாரண பங்களிப்புகளைச் செய்த மதபோதகரும் சிறந்த தமிழ் அறிஞருமான ஜி.யு. போப்பின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவரது நினைவுச் சின்னத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு இடம்பெறுவதை எண்ணி நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்வில் எம்முடன் கலந்து கொள்ளும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமெங்குமுள்ள 90 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் தமிழ் மொழியானது உலகிலுள்ள பாரம்பரிய மொழிகளில் ஒன்றாகவுள்ளது. அத்துடன் அது உலகில் நீடித்து

நிலைத்துள்ள மிகவும் பழைமையான மொழியாகவும் உலகிலுள்ள சிறந்த மொழிகளிலொன்றாகவும் விளங்குகிறது. தமிழர்களது அடையாளத்தின் ஒருங்கிணைந்த பாகமாகவுள்ள தமிழ்மொழி எமது தாய் மொழி என்பதையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம்.

ஏறக்குறைய 2,000 ஆண்டுகள் பழமையான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ் நூலான திருக்குறளானது ஒருவரின் நெறி மற்றும் நல்லொழுக்கம் பற்றிப் பேசுவதுடன் அதன் ஞான வார்த்தைகள் அவை எழுதப்பட்ட போது எவ்வாறு இருந்ததோ அது போன்று அதே விதத்தில் இன்றும் பயன்படுத்தக் கூடிய வகையில் உள்ளன.

சரியாகக் கூறுவதென்றால் திருக்குறளானது எந்தவொரு விடயத்தையும் விட்டு விடாது அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அது 40க்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளதுடன் பிரபஞ்ச ரீதியான ஒழுக்கவியல் நூலொன்றாக பரவலாகக் கருதப் படுகிறது. திருக்குறள் லியோடோல்ஸ்டோய் மற்றும் மகாத்மா காந்தி உள்ளடங்கலாக அநேக முக்கியத்துவம் மிக்கவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மதபோதகரான போப்பின் மொழிபெயர்ப்புகள் உலகில் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களும் திருக்குறளைப் பாராட்டுவதையும் அதிலிருந்து நன்மையைப் பெறுவதையும் சாத்தியமாக்கியுள்ளது. போப்பின் மொழிபெயர்ப்புகளினூடாக அதன் செழுமை உலகிற்கு கிடைத்துள்ளது. அதற்காக நாம் என்றென்றும் நன்றியாகவுள்ளோம்.

அத்துடன் மதகுரு போப் நாலடியார், இந்துக்களின் மும்மூர்த்திகளில் ஒருவரான சிவனுக்கான தேவாரமான திருவாசகம் போன்ற தனித்துவமான தமிழ் நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் என அநேக புத்தகங்களை எழுதியுள்ளார்.

கனடாவிலுள்ள தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்பொன்று என்ற வகையில் கனேடிய தமிழர் பேரவை மதகுருவான போப் எமது தமிழ் மொழிக்கு ஆற்றிய பங்களிப்பிற்கு அவரைக் கௌரவப்படுத்த நினைவுச்சின்ன மொன்றை நிர்மாணிக்கும் வரலாற்று முக்கியத்தவம் மிக்க திட்டத்தை முன்னெடுப்பது எமது கடப்பாடாக இருந்தது. எங்களுக்கு இது தமிழ் மொழிக்கு அசாதாரண பங்களிப்பைச் செய்த ஒருவருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கவும் அவரை அங்கீகரிக்கவுமான ஒரு வாய்ப்பாக உள்ளது.

அந்த வகையில் கனேடிய தமிழர் பேரவை ஜி.யு. போப் நினைவுச்சின்னத்தை நிறுவும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க திட்டத்தை முன்னெடுப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந் நினைவுச் சின்னமானது தமிழறிஞர் ஜி.யு. போப் உலகெங்கும் வாழும் தமிழர்களின் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கிறார் என்பதை உறுதிபட நிறுவுகிறது என்று தெரிவித்தார்.'

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கம்



மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் கோடை சுற்றுலா Sussex village Park-ல் ஜுன் மாதம் நான்காம் தேதி நடைபெற்றது. சுமார் 75 குடும்பங்களுக்கு மேல் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் சுடச் சுட தோசையுடன் சுவையான உணவு வகைகள் பரிமாறப்பட்டன. பெரியவர் களும், குழந்தைகளும் பல விளையாட்டுப் போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

Adopt-A-Highway: நமது சங்கத்தினரால் ஜூலை 15 தேதி பீவாக்கீ நெடுஞ்சாலை தூய்மை செய்யப்பட்டது. சூலை மாதத்தில் பேரவை விழாவில் சங்கங்களின் சங்கமத்தில் GMTS சார்பாக சங்கத் தலைவர் யுவராஜா மணவாளன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பேரவை விழாவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றவர்கள் விவரம் :

1. அனன்யா அசோகன் - Solo classical dance-Second prize
2. பிரணவ் செந்தில்முருகன் - Classical Singing-First prize, Non classical Singing - First prize
3. திவ்யஸ்ரீ செந்தில்முருகன் - Classical Singing - Second prize, Non Classical Singing- First Prize
4. திருமதி. நளினி சுந்தரராஜன் - Poetry writing-Finalist

திருமதி.நளினி சுந்தர்ராஜன் எழுதிய "ஆத்திச்சூடியில் வள்ளுவம்" என்ற கட்டுரை பேரவை விழா மலரில் வெளியிடப்பட்டது. அவர் கவிதைப் போட்டியில் இறுதிப் போட்டியாளராகத் தேர்வு செய்யப்பட்டார். GMTS உறுப்பினர்கள் சிகாகோ தமிழ்ச் சங்கத்தினருடன் இணைந்து சிகாகோ மாநகரில் 2024 வருடம் நடைபெற விருக்கும் ஐந்தாவது உலகத் திருக்குறள் மாநாட்டில் கலந்து கொள்ள அனைவரையும் வரவேற்றனர்.

அட்லாண்டா தமிழ்ச் சங்கம்

அட்லாண்டாத் தமிழ்ச் சங்கம் வாயிலாக ஏப்ரல் மாதத்தில் ரத்ததான முகாம், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கானக் கல்லூரி தகவல்கள் பரிமாற்றக் கூட்டம் மற்றும் சித்திரைத் திருவிழாவும் மிகப்பெரிய அளவில் நடைபெற்றன. மே மாதத்தில் சங்க உறுப்பினர்களுக்கான மலையேற்ற நடைப்பயிற்சி (Hiking) , இதய இயக்க மீட்புப் பயிற்சி, மருத்துவ முகாம், பூப்பந்தாட்டம், மற்றும் மகளிர் கொண்டாட்டம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

சூன் மாதத்தில் GATS விவசாயி, மருத்துவ முகாம், இளைஞர்கள் கோடை விடுமுறைச் சிறப்பு வகுப்புகளுக்கான முதல் பகுதி போன்றவை நடைபெற்றன.

சூலை மாதத்தில் இளைஞர்கள் கோடை விடுமுறைச் சிறப்பு வகுப்புகளுக்கான இரண்டாம் பகுதி, மருத்துவ முகாம், மட்டைப் பந்தாட்ட போட்டி மற்றும் முதியோர் சந்திப்பு போன்ற நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனைவருக்கும் பயன்படும்படி நடைபெற்றன.

இவ்வாறாக சென்ற காலாண்டில் மக்களுக்குத் தேவையான அனைத்து நிகழ்வுகளையும், இயக்குனர் குழு, செயற்குழு மற்றும் அனைத்துத் தன்னார்வலர்கள் உதவியுடன் செய்து முடித்துள்ளது.

அறவழி நடப்போம்! தமிழ் வழி உயர்வோம்!

ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பு

ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பு தங்களது 6-வது ஆண்டு விழாவையும், பொதுக்குழு கூட்டத்தையும் மே மற்றும் சூன் 2023 -இல் நடத்தியது. தமிழர் பண்பாட்டை பாரம்பரிய நிகழ்ச்சிகள் மூலமாகப் பறைசாற்றும் விதமாக விழா அமைந்தது. ஆத்திச்சூடி அருந்தமிழ்ப் பள்ளி மாணாக்கரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. சின்னஞ்சிறு மொட்டுகள், பொன்னியின் செல்வன் நாயகர்களை தங்களது உடைகளின் மூலமாக நேரில் கொண்டு வந்தனர். நடனநாட்டிய நிகழ்ச்சி மூலம் யாழ் நூலகத்தை அறிமுகப்படுத்தினர். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என அனைத்து வயதினரும் ஆடல், பாடல், வாத்திய இசை, நகைச்சுவை நாடகம், பேச்சு என பார்ப்போரை மகிழ்வித்தனர். முத்தாய்ப்பாகப் பறை இசையும் இசைக்கப்பட்டது. பொதுக்குழு தேர்ந்தெடுத்த புதிய நிர்வாகிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். பழைய நிர்வாகிகள், பள்ளியின் தன்னார்வல ஆசிரியர்கள் மற்றும் தொண்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பெருமைப் படுத்தப்பட்டனர்.

கொள்ளை மாற்றுதல்

வெற்றி பெற்ற படை மறவர் தோற்ற பகைவர் நாட்டில் புகுந்து கொள்ளை இடுவர். இந்த இழி செயலை தடுத்து நிறுத்த அரசன் தோற்ற வேந்தனிடம் இருந்து பெற்ற பொற்கலங்களை உருக்கி பொற்கட்டிகளாகச் செய்து வீரரின் தகுதிக்கேற்ப பரிசளிப்பான். சில சமயம் மருத நிலத்து ஊர்களையே வழங்குதல் மரபு. பசுமையான பயிர்கள் விளையும் சீரூர்கள் வழங்கப்பட்டாலும் வீரர்கள் அதனை ஏற்காது மருத நிலத்து ஊர்களையே விரும்பிப் பெறுவர்.

திரு. இராய் இரத்தினவேல்

திருமிகு அனுஷானி அழகராஜா

பேரா. இராமு மணிவண்ணன்

உலகத் தமிழர் நேரம்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முப்பத்தியாறாவது தமிழ் விழா கலிபோர்னியா மாகாணத்தின் தலைநகரான சாக்ரமண்டோ நகரில் சிறப்பாக நடைபெற்றது. பேரவையும் சாக்ரமெண்டோ தமிழ்ச் சங்கமும் இணைந்து இந்த விழாவினை ஒருங்கிணைத்தனர். இந்த விழாவில் உலகமெங்கும் வாழும் தமிழர்களின் உரிமை சார்ந்த தலைப்புக்களில் பேசும் அமர்வான உலகத் தமிழர் நேரம் சூலை 2 ஞாயிற்றுக்கிழமை மாலை பேரவை விழா மேடையில் நடைபெற்றது.

இந்த அமர்விற்கு சிறப்பு விருந்தினர்களாக இலங்கையில் இருந்து மனித உரிமைச் செயற்பாட்டாளர் திருமிகு. அனுஷானி அழகராஜா, கனடாவில் இருந்து "பிரிசனர் எண் 1056" எனும் நூலினை எழுதிய திரு. இராய் இரத்னவேல், தமிழ்நாட்டில் இருந்து சென்னைப் பல்கலைக்கழக (ஓய்வு) பேராசிரியர் திரு. இராமு மணிவண்ணன், நாடுகடந்த தமிழீழ அரசின் தலைவர் திரு. உருத்திரகுமாரன் விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. இளங்கோவன் சந்தானம்

விழாவில் பேசிய திரு. இராமு மணிவண்ணன் அவர்கள் ஒரு தேசிய இனமக்களின் மொழி உரிமையைப் பாதுகாப்பது என்பது எவ்வளவு இன்றியமையாதது என வலியுறுத்திப் பேசினார். மொழி உரிமையைப் பாதுகாக்கத் தவறியதால் இந்தியாவில் நூற்றுக்கணக்கான மொழிகள் அழிந்து போனதைச் சுட்டிக் காட்டினார். மேலும் ஆப்ரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஒரே நாட்டில் மூன்றிற்கும் மேற்பட்ட மொழிகள் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார். அதைப் போலவே

திரு.விசுவநாதன் உருத்திரகுமாரன்

இந்தியாவிலும் எட்டாவது அட்டவணையில் இருக்கும் தமிழ் உள்ளிட்ட இருபத்தி இரண்டு மொழிகளையும் தேசிய மொழியாக அங்கீகரிக்க அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்தினார்.

திரு. உருத்திரக்குமாரன் அவர்கள் பேசுகையில், ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் பொது வாக்கெடுப்பை முன்னெடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் தமிழர்களுக்கு என உலகளாவிய ஒரு பொது வங்கியை உருவாக்கும் முயற்சியில் நாடு கடந்த தமிழீழ அரசு ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார் தமிழர்களுக்கு என ஒரு நாடு அமைவது தமிழர்களுக்கு மட்டும் நலன் சேர்க்கும் என்பதை விட தமிழர்கள் தங்கள் ஆற்றலைக் கொண்டு இந்த உலகின் மேன்மைக்கும் மேலும் சிறப்பாக பங்களிப்பார்கள் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையில் தன் சிறு வயதில் எத்தகைய துன்புறுத்தல்களை தான் எதிர்கொண்டேன் எனவும் இன்றைய இளைஞர்கள் தங்கள் உரிமை வென்றெடுக்க எவ்வாறு விடாமுயற்சியுடன் முயல வேண்டும் எனவும் திரு. இராய் இரத்னவேல் அவர்கள் பேசினார்.

முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போர் முடிந்து பதினான்கு ஆண்டுகள் கடந்த பிறகும் இன்றும் கூட இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் எத்தகைய ஒடுக்குமுறைச் சூழலை எதிர்கொள்கின்றனர் என்பதை திருமிகு. அனுஷானி தனது உரையில் விரிவாகக் குறிப்பிட்டும் இளைய தலைமுறையினர் மனித உரிமை தொடர்பான செயல்பாடுகளில் அதிக அளவில் பங்கெடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்திப் பேசினார்.

அமர்வின் நிறைவுப் பகுதியில் விருந்தினர் அனைவருக்கும் நினைவுக் கேடயமும், பொன்னாடையும் வழங்கி விழா நிர்வாகிகளால் சிறப்புச் செய்யப்பட்டது.

சாதி

சங்ககாலத்தில் ஜாதி என்ற சொல்லோ அல்லது அதன் கிரந்தம் நீக்கிய வடிவமான சாதி என்ற சொல்லோ தமிழர்களினால் பயன்படுத்தப்படவேயில்லை. சாதி என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல் இன்றுவரை தமிழிலில்லை. சாதி என்ற சொல்லே சங்கமருவிய காலத்திலேயே முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் வர்ணங்களைக் குறித்தே வருகின்றது.

"நால்வகை சாதியும், நலம்பெற நோக்கி "-(வேனில் காதை41)

அடுத்ததாக மணிமேகலையில் இடம்பெறுகின்றது.

"நாமம் சாதி..கிரியையின் அறிவது ஆகும்."- (சமயக்கணக்கர் 23).

எனவே சங்க காலத்தில் சாதி /அதற்கு நிகரான வேறு தமிழ்ச்சொல்லே இல்லை.

மௌனம் களைவோம்

கறுப்பின மனிதருக்கோர் சிறுமை
வெள்ளை அறிக்கை
வீட்டின் கதவிடித்தாலும்
நம்பிக்கை கொள்வதில்லை
நாளத்தில் குருதி தகிக்கவில்லை

வெள்ளைப் பக்கங்களில்
கருமை பூசிய சொற்கள்
உண்மையை பேசின நாளும்
தோட்டாக்கள் பேனாக்களை
வஞ்சகமாய் வதம் செய்து
பத்திரிக்கை தருமத்தை மாய்த்த போதும்
நெஞ்சம் கலங்கவில்லை
கண்ணீர் துளிர்க்கவில்லை

கலவர பூமியில்
இளமங்கையை மாய்த்த பேரை
திலகமிட்டு மாலைச் சூட்டி
வீரனென பாரினில் ஏத்தும்
மடமை கண்டே நொந்து
நீதியின் நீள்துயில் கலையவில்லை
பேதமெனும் நெருஞ்சியை பொசுக்கவில்லை

வாய் பேசாக் குரங்கு
கண்களை மூடிய குரங்கு
காதுகளைப் பொத்திய குரங்கு
மூன்று பொம்மைகள் எதற்கென

கவிஞர் இரம்யா
ரவீந்திரன்

ஒரே பொம்மையாய்ச் செய்தோம்
அநீதிகண்டும் கேட்டும் வாயடைத்து
சமூக ஊடகத்தில் தொலைந்து
சகதியில் வீழ்ந்த மனிதம்
சூழ்ந்த காரிருள் விலக்கவில்லை
சமத்துவ உலகம் மலரவில்லை

அநீதி தனக்கே நிகழும் வரை
எதிர்ப்புக் குரல் ஒலிப்பதில்லை
உதவிக் கரம் நீளுவதில்லை
துயில் கொள்வோரை எழுப்பலாம்
நடிப்போரை எந்நாளும் எழுப்பவியலாது
அகழ்வாரைத் தாங்கும் நிலமென்றாலும்
நெருப்புமிழும் எரிமலைகள்
அடியினில் கனன்று கொண்டிருக்கும்
புவியிடம் பாடம் படிப்போம்
மௌனம் சம்மதமல்ல
புதுவெள்ளம் கரைக்குள் நிறைவதல்ல
அச்சமெனும் முள்ளில் சிக்கி
அடிமையாய்க் கோழையாய்
முகமின்றி வாழ்வது தொலைத்து
ரௌத்திரம் பழகுவோம்
வீழ்ந்தாலும் ஆங்கொருவர்
வாழ்வதற்கென்றே மாற்றுவோம்
கள்ளிக் காட்டில் மறைத்தாலும்
காடழிக்கும் தீப்பொறியாய்த் தோன்றுவோம்
உப்புக்கடல் சேர்ந்தாலும்
ஒற்றைத் தேன்துளியாய் ஆகுவோம்!

திரு. இந்திரன்.
பி. இந்திராகிருஷ்ணன்

திரு. வேணு பிரபாகர்

திருமிகு. தேன்மொழி
சவுந்தர்ராஜன்

அமெரிக்கத் தமிழர் முன்னோடி விருதுகள் 2023

2014 ஆம் ஆண்டு முதல் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் சார்பாக பேரவையின் தமிழ் விழாவில் "அமெரிக்கத் தமிழர் முன்னோடி விருது" அறிவிக்கப்பட்டு, விழா மேடையில் முன்னோடிகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. வட அமெரிக்காவில் வாழும் தமிழர்களில் கலை, அறிவியல், அரசியல், ஊடகம், கல்வி, வணிகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் துறைசார் வல்லுநர்களாகவும், சாதனையாளராகவும் விளங்கி தமிழ்ச் சமூகத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் தமிழர்களைப் பாராட்டி இந்த முன்னோடி விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டு சாக்ரமெண்டோவில் நடைபெற்ற 36 - வது தமிழ் விழாவில் பின் வரும் அமெரிக்கா வாழ் முன்னோடித் தமிழர்களுக்கு "அமெரிக்கத் தமிழர் முன்னோடி விருதை "வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை" வழங்கி சாதனையாளர்களை பெருமைப்படுத்தியது.

திரு. இளங்கோவன்
சந்தானம்

மருத்துவர் திரு. இந்திரன். பி. இந்திராகிருஷ்ணன்

மருத்துவர், பேராசிரியர், ஜார்ஜியா பல்கலைக்கழகம் - மருத்துவத்துறை, அட்லாண்டா, ஜார்ஜியா

ஜார்ஜியா மாகாண சபை கடந்த 14 பிப்ரவரி 2018 ஆம் நாளை மரு. இந்திராகிருஷ்ணன் நாளாக அறிவித்து இவருக்கு பெருமை சேர்த்துள்ளது.

மருத்துவர் திரு. வேணு பிரபாகர்,

அமெரிக்க தமிழ்நாடு மருத்துவக் கழகத்தின் இணை நிறுவனர். சான் தியாகோ, கலிபோர்னியா.

திருமிகு. தேன்மொழி சவுந்தர்ராஜன்
தெற்காசிய ஆய்வுகளுக்கான ஸ்டான்போர்டு மையத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார். “ட்ரவுமா ஆப் காஸ்ட்” நூலின் ஆசிரியர்.

விருது பெற்ற அனைவருக்கும் அமெரிக்கத் தமிழர் முன்னோடிகள் விருதுகள் தேர்வுக்குழு சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள்.

முல்லைப்பாட்டும் மனித வாழ்வும்

திரு. இராம்துரை பாலசுப்ரமணியன்

முல்லைப்பாட்டு, பழங்காலத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டின் ஒரு முக்கியப் பகுதி. இந்தியாவின் பண்டையத் தமிழ்நாட்டில் சங்கக் காலத்தில் உருவான இந்நூலின் ஆசிரியர் நப்பூதனார்.

இருப்பினும் இந்நூலின் துல்லியமான படைப்பு அறியப்படாத நிலையில், இது பல கவிஞர்களின் கூட்டுப் படைப்பாகவும் நம்பப்படுகிறது. மொத்தம் 103 அடிகளைக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பு, பசுமையான முல்லை நிலப்பரப்பைக் கொண்டாடுகிறது. மனித நேயத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான இணக்கமான உறவை சித்தரிக்கிறது. முல்லைப்பட்டு வேட்டையாடுதல், விவசாயம், காதல் மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவற்றின் காட்சிகளைப் படம்பிடிக்கிறது. இந்நூல் நெஞ்சாற்றுப்படை எனவும் அழைக்கப்படுகின்றது.

போர் காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன், அதனால் தலைவி ஆற்றும் பிரிவு மற்றும் துயரம், அதனை மிகுதிப் படுத்தும் கார்காலம், மழையினால் செழித்த முல்லை, முல்லை நிலமாகிய காட்டின் நடுவே தலைவன் போர்ப் பாசறை அமைத்துத் தங்குதல், ஒழுக்கம் பற்றுதல், வெற்றிக் களிப்பு, திரும்ப வருதல், தலைவி மகிழ்ச்சி அடைதல் என இந்த வரிசையான நிகழ்வுகளைக் கருவாகக் கொண்டுள்ள இந்த முல்லைப்பாட்டுப் பாடல்கள் மனித வாழ்க்கை, உணர்வுகள், இயற்கையோடு இணைந்திருப்பது பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை ஆராய்கின்றன.

அவற்றுள் சிலவற்றை கீழே தொகுத்துள்ளேன்.

இயற்கையோடு இணக்கம்:

மனிதக் குலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள காலத்தால் அழியாத பந்தத்தை சித்தரிக்கிறது. இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை முறை, அதன் நிலையற்றத் தன்மை அதனால் மனிதன் கற்கும் ஞானம் ஆகியவற்றையும் முல்லைப்பாட்டுப் பாடல்கள் பிரதிபலிக்கின்றன.

"அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர,

முறி இணர்க் கொன்றை நன் பொன் கால" - கிளையில் அமர்ந்திருக்கும் பறவையையும், பூக்கும் பூவையும், அழகிய கணுக்காலில் அணிந்திருக்கும் தங்க வளையலையும் இந்தப் பகுதி அழகாக விவரிக்கிறது. இயற்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பைச் சித்தரிக்கிறது.

வாழ்க்கையின் நிலையற்றத் தன்மை:

பல முல்லைப்பாட்டுப் பாடல்கள் மனித வாழ்வின் வேகமான சுழற்சியைச் சுட்டிக்காட்டுகின்றன. பூக்கும் பூக்கள், இடம்பெயரும் ஆறுகள் மற்றும் மாறிவரும் பருவங்கள் என நம் வாழ்க்கையும் தற்காலிகமானது என்பதை நினைவூட்டுகின்றன.

"எடுத்து எறி எஃகம் பாய்தலின், புண் கூர்ந்து, பிடிக் கணம் மறந்த வேழம் வேழத்துப்..."



இந்த வரிகளானது இசையைப் பயன்படுத்தி ஒரு பாம்பைக் கவர்ந்து, அதைப் பிடிக்கும் ஒரு வசீகரனின் உருவகத்தின் மூலம் வாழ்க்கையின் விரைவான தன்மையையும், அடுத்த வினாடி மாறும் நிலையற்றத் தன்மையையும் சித்தரிக்கிறது.

உணர்ச்சி ஆழம் மற்றும் உலகளாவியத் தன்மை:

பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ள மனித உணர்வின் நுணுக்கங்கள் நம் வாழ்வியல் அனுபவங்களின் உலகளாவியத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. காதல், ஏக்கம், மகிழ்ச்சி மற்றும் துக்கம் போன்ற உணர்வுகளை இயற்கை சூழலோடு நம்மால் உருவகப்படுத்திப் பார்க்க

முடிகிறது.

"இன் துயில் வதியுநன் காணாள். துயர் உழந்து, நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறை தபு புலம்பொடு..."

இந்த வரிகளானது மனித உணர்வுகளின் ஆழத்தையும் அதன் உலகளாவியத் தன்மையையும் படம்பிடித்து, காதலனிடமிருந்து பிரிந்த ஒரு காதலியின் உணர்வுகளை பூக்கள் வாடுவதற்கு ஒப்பிடுகிறது.

சமநிலையும் நல்லிணக்கமும்:

முல்லைப்பாட்டுப் பாடல்கள் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ளக் கூட்டுவாழ்வு, சமநிலை மற்றும் நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் விளக்குகிறது. இக்கருத்து இயற்கையின் சமநிலையை போற்றிப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்துகிறது.

"எதிர் செல் வெண் மழை பொழியும் திங்களில்.. முதிர் காய் வள்ளிஅம் காடு பிறக்கு ஒழிய, துனை பரி துரக்கும்

செலவினர் ....   "

இந்த வரிகளானது மழை பொழிதலும், மன்னன் தேரில் வருவதையும் குறிக்கும் வகையில் சமநிலையையும் நல்லிணக்கத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

ஆன்மீகத் தொடர்பு:

முல்லைப்பாட்டுப் பாடல்கள் மனித வாழ்வின் ஆன்மீகப் பரிமாணத்தை சுட்டிக் காட்டுகின்றன. வாழ்வியில் கூறுகளான உத்வேகம், உள்நோக்கம் ஆன்மீகத் தொடர்பு மற்றும் தெய்வீகத்தின் பிரதிபலிப்பாகவும் அறியப்படுகின்றன.

"கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி ...யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, ... நறு வீ முல்லை அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது ... "

இந்த வரிகளானது, தெய்வத்தை வணங்குதலை குறிக்கிறது, ஆன்மீக தொடர்பையும், பக்தியையும் எடுத்துக்காட்டுகிறது.

புதுப்பித்தல் மற்றும் மீளுருவாக்கம்:

முல்லைப்பாட்டுப் பாடல்களில் பருவங்களின் சுழற்சிகளோடு தொடர்புடைய மனித வாழ்க்கை முறையும், பிறப்பு, இறப்பு மற்றும் மறுபிறப்பு ஆகியவற்றின் சுழற்சித் தன்மையையும் குறிக்கிறது. இது முல்லைப்பாட்டில் காணப்படும் ஒரு மையக்கருவாகும். வாழ்வின் சவால்கள், அடுத்த நிமிடம் மறைந்திருக்கும் ஆச்சரியங்கள், பின்னடைவுகள் அதன் பிறகு உண்டாகும் மீளுருவாக்கம், மாற்றம், வளர்ச்சி மற்றும் புதுப்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியக் கருத்துக்களையும் பிரதிபலிக்கின்றது.

"அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர...."

இவ்வரிகள் - பூத்து, விரியும் பூ மொட்டினையும், நன்கு விளைந்த கதிர்களையும் சித்தரிக்கிறது, இது இயற்கை உலகில் புதுப்பித்தல் மற்றும் மீளுருவாக்கம் போன்ற கருத்துகளைக் குறிக்கின்றது.

வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம்:

முல்லைப்பாட்டுப் பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரத்தை விவரிக்கின்றது. அக்காலத்தின் அன்றாட வாழ்க்கை முறை மற்றும் சமூக இயக்கவியல் பற்றிய பார்வைகட என முல்லைப்பாட்டு முழுவதும் ஆங்காங்கே பறைசாற்றப்படுகின்றது.

முல்லைப்பாட்டுக்குள் ஒரு குறிப்பிட்ட கதை கட்டமைப்பு பின்பற்றபடவில்லை என்றாலும், ஒட்டுமொத்தமாக இந்தத் தொகுப்பு, பண்டைய தமிழ் மக்களின் உலகக் கண்ணோட்டம் மற்றும் கலாச்சாரச் சூழலைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும் கருப்பொருள்கள், உணர்ச்சிகள், பிரபஞ்சத்துடனான நமது உறவு மற்றும் அனுபவங்களின் ஒரு தொகுப்பை வழங்குவது தனிச் சிறப்பு வாய்ந்தது. அதன் முக்கியத்துவம், காலத்தைக் கடந்து நவீன வாசகர்களுடன் மிக எளிதாக இணைகிறது. இயற்கை, உணர்ச்சிகள் மற்றும் வாழ்க்கையின் சுழற்சித் தன்மை ஆகியவற்றுடன் மனித தொடர்பின் நீடித்த கருப்பொருள்களை முல்லைப்பாட்டு எடுத்துக்காட்டி, படிப்பவர் ஒவ்வொருவரின் வாழ்விலும் தனி இடத்தைப் பிடிக்கிறது! முடிவாக முல்லைப்பாட்டு எதிர்காலச் சந்ததியினர் போற்றிப் பாதுகாக்க வேண்டிய ஒரு பொக்கிஷம் என்றால் அது மிகையல்ல!

கலைகலைப்பாவீ
ஓர் கருத்துக்களம்

அற்புதமான கருத்துக்களுடன், அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கருத்துக்களம் புகழ்மிக்க நடுவர் அவர்களின் சீரியத் தலைமையில் மிகச் சிறப்பாக அரங்கேறியது.

எங்கே, எப்போது எனக் கேட்கிறீர்களா? சூன் 30, சூலை 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் நமது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்திய பேரவையின் 36 தமிழ் விழாவில் சூலை 1 ஆம் நாள் மாலை ஆறு மணி அளவில், ஜீ தொலைகாட்சியின் 'தமிழா தமிழா' புகழ் நடுவர் மற்றும் திரைப்பட இயக்குனர் திரு கரு.பழனியப்பன் அவர்கள் தலைமையில் நடந்தது.

திருமிகு ஷீலா ரமணன்

இந்த கருத்துக்களம் "வீட்டில் குழந்தைகளின் ஆளுமை நேர்த்தியாக இருக்கிறது/நகைச்சுவையாக இருக்கிறது" என்ற தலைப்பில் அமைந்தது.

இதில் "நேர்த்தியாக இருக்கிறது" என்ற குழுவில் திருமிகு.ஜான்சி பிரபாகரன், திரு.சுந்தர் பசுபதி, திருமிகு.சுபா கே கே, திருமிகு.பிரதிபா பிரேம்குமார், திருமிகு.ஷீலா ரமணன் ஆகியோரும், "நகைச்சுவையாக இருக்கிறது" எனும் குழுவில் திருமிகு.வைஷாலி பாஸ்கரன், திருமிகு.விஜி அழகர், திரு.அழகப்பன் சொக்கலிங்கம், திருமிகு.பமீலா வெங்கட், திரு.வாசு சண்முகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அனைவரும் தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்தும் பொது வெளியில் நடப்பதில் இருந்தும் கருத்துக்களை முன் வைத்தனர். இந் நிகழ்ச்சியைப் பலரும் பார்த்து ரசித்து ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினர்.

இறுதியில் வள்ளுவனின் குறளோடு, இரு தரப்பினரின் கருத்துக்களையும் உள்வாங்கி, அதைச் சுருக்கமாய் தொகுத்துக் கூறி, தன்னுடைய தீர்ப்பினை முன்வைத்து, நடுவர் இந்தக் கருத்துக்களத்தை அழகாக முடித்து வைத்தார். பேரவை விழாவில் மிகப்பெரிய அவையில் நடந்த சிறப்பான நிகழ்ச்சி இது. இந்த நிகழ்வினை ஒருங்கிணைத்த பேரவையின் நிகழ்ச்சி வழிநடத்தல் குழுவிற்கு மனமார்ந்த நன்றி.

மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம்

மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம், டல்லாஸ், இந்தக் கோடை விடுமுறையில் குழந்தைகளுக்காக ஆறு வார ஓவியப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது. ஓவியர் திரு.ஸ்ரீனிவாசன் சென்னையிலிருந்து இணைய வழியாகப் பயிற்சியளித்தார். அடிப்படை மற்றும் இடைநிலை என இரண்டு நிலைகளாக இந்தப் பட்டறை நடைபெற்றது. நிறைய குழந்தைகள் ஆர்வமாக இதில் பங்குபெற்று தங்களின் ஓவிய ஆற்றலை இன்னும் சிறப்பாக வளர்த்துக் கொண்டனர்.

ஜூலை 8, 2023 அன்று, மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் கோடை விழா நிகழ்ச்சியை நடத்தியது. விழாவில் டாக்டர். கர்கா சாட்டர்ஜி, உதவிப் பேராசிரியர் – இந்தியப் புள்ளியியல் கழகம், இலக்கியச்சுடர் திரு. தி.ராமலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். விழாவின் சிறப்பம்சமாக சிறப்பு விருந்தினர்கள் திரு. ஜேம்ஸ் வசந்தனின் சேர்ந்திசை, தமிழோடு விளையாடு மற்றும் திரு. ஜேம்ஸ் வசந்தன் நடுவராகப் பங்கேற்ற "தமிழ்ச் சமுதாய YouTuber-கள் நல்லதை விதைக்கிறார்கள்! vs வெட்டியாகக் கதைக்கிறார்கள்!" என்ற தலைப்பில் விவாத மேடை, திரு. ஆதவன் அவர்களின் நகைச்சுவை நேரம், திரு. பவா செல்லதுரை அவர்களின் கதையாடுவோம், திரு. ஜேம்ஸ் வசந்தன் மற்றும் திரு. சசிகுமார் அவர்களின் 'சுப்ரமணியபுரம்' திரைப்படத்தின் 15 ஆண்டு வெற்றிக் கொண்டாட்டமும் நடந்தேறியது.

டல்லாஸ் வட்டார மக்கள் நிகழ்ச்சிகளை உற்சாகத்துடன் கண்டு மகிழ்ந்தனர். விழாவில் தமிழ்ச் சங்க குடும்பங்களில் இருந்து மேல்நிலை பள்ளிப் படிப்பு முடித்த மாணவ மாணவிகள் பெருமைப்படுத்தப்பட்டனர். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உயில் மற்றும் அறக்கட்டளை திட்டமிடுதல் மற்றும் குறைந்த கால காப்பீட்டு திட்ட மேளாவை ஜூலை 29, 2023 அன்று ஃபிரிஸ்கோவில் நடத்தப்பட்டது. டல்லாஸ் மாகாணம் மட்டுமல்லாமல் சிகாகோ, சியாட்டல் மற்றும் கலிபோர்னியா மாகாணத்தில் இருந்து 20 க்கும் மேற்பட்ட உயில் மற்றும் அறக்கட்டளை சேவை வழங்குபவர்கள் (service providers) வந்திருந்தனர். சமூக அக்கறையுடன் இப்படி ஒரு வாய்ப்பை அமைத்துக் கொடுத்து, விழிப்புணர்வு ஏற்படுத்திய மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் முயற்சியை வந்திருந்த அனைவரும் பாராட்டினர். இரண்டாவது மேளா ஆகஸ்ட் 19, 2023 அன்று இர்விங்கில் நடைபெற்றது.

மிச்சிகன் தமிழ்ச் சங்கம்

இதய இயக்க மீட்புப் பயிற்சி: இதய இயக்க மீட்புப் பயிற்சி (CPR) என்பது உயிர்காக்கும் நுட்பமாகும். இது மாரடைப்பு அல்லது ஒருவரின் சுவாசம்/இதயத் துடிப்பு நின்றுவிடும் போன்ற அவசரநிலைகளில் ஒருவரின் உயிரைக் காக்க மிகப் பயனுள்ளதாக இருக்கும். இப் பயிற்சியை, ஜூலை 31 அன்று மிச்சிகன் தமிழ்ச் சங்கம், அமெரிக்க இதய நலன் சார்ந்த தொண்டு நிறுவனமான (American Heart Association-AHA) உடன் இணைந்து வழங்கியது. இதய இயக்க மீட்புப் பயிற்சித் துறையில் கைதேர்ந்த நிபுணர் மிச்சிகன் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுத்தார். பயிற்சி உபகரணங்களையும் அன்பளிப்பாக அளித்தார்.

கோடைக் கொண்டாட்ட நிகழ்ச்சி: ஆகஸ்ட் 5 சனிக்கிழமையன்று மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் கோடைக் கொண்டாட்ட நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. நிகழ்ச்சியின் மையப் பொருள் ஹவாய் என்பதால் அனைவரும் வண்ண வண்ண உடைகள் அணிந்து வந்தனர். பலரும் கொண்டு வந்த பல்சுவை உணவு வகைகளை அனைவரும் ஒருவருக்கு ஒருவர் பரிமாறி உண்டு மகிழ்ந்தனர். சிறுவர் முதல் பெரியவர் வரை பல விளையாட்டுகளில் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. குலுக்கலில் வென்றவர்களுக்கு பல மனங்கவர் பரிசுகள் வழங்கப்பட்டன. எல்லாரும் கூடி மகிழ்ந்த ஒரு அழகான நாளாக இது அமைந்தது.

காவல் மரம்

பழங்காலத்தில் வேங்கை, புன்னை, வேம்பு இன்னும் சில மரங்களை வெற்றியைக் குறிக்கும் குறியீடாகவும் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் காவல் மரமாகவும் நம்பினர். இதனை வீரர்கள் இரவு பகலாக காத்து வந்தனர். இவை சில அரசர்களால் தலைநகரில் மட்டும் தனிமரமாகவும் சிலரால் ஊர்தோறும் தனிமரமாகவும் வளர்க்கப்பட்டது. வேந்தர் தம் பகைவரின் காவல் மரத்தை வெட்டுவது மரபு. பகைவரின் வெட்டுதலுக்கு ஆட்படாது காப்பது மானமுடைய வேந்தரின் கடமை.

மத்திய புளோரிடா முத்தமிழ்ச் சங்கம்

மத்திய புளோரிடா முத்தமிழ்ச் சங்கமானது 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த 37 வருடங்களாக நமது தமிழ் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டுச் சிறப்பை நமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் பல நிகழ்வுகளை ஆர்லாண்டோ பகுதியில் சிறப்பாக நடத்தி வருகிறது.

கடந்த காலாண்டில், மட்டைப் பந்தாட்டத்தைத் தொடர்ந்து, முகநூல் நேரலை (Facebook Live Q & A session) அமர்வு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் வழக்கறிஞர் திரு. இராமச்சந்திரன் பலராமன் (Ram Law Firm) அவர்கள் அமெரிக்க குடியேற்றம் தொடர்பான நமது உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். திரு விஜய் செந்தில் பத்பநாபன் (Seed IncubIT) அவர்கள் தொழில் முனைவு மற்றும் தொழில் சார்ந்த சந்தேகங்களுக்கும் தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள் பற்றியும் விளக்கமளித்தார். தொடர்ந்து திரு. தேவ் பாலகிருஷ்ணன் (Certified Financial Group INC.) அவர்கள் நிதி மேலாண்மை பற்றிய விளக்கங்களும், நாம் நிதியை எப்படி கையாள வேண்டும் என்பது பற்றியும் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து உலக மகளிர் தினத்தை போற்றும் வகையில் மகளிரை ஊக்கவிக்கும் மற்றும் தகவல் தரும் பயிரலங்கமாக(Women's Day Workshop) கல்வி, சமூக வளர்ச்சி, ஆளுமை, குழந்தை வளர்ப்பு, மூச்சுப்பயிற்சி மற்றும் மகளிர்க்குப் பயன்படும் செய்திகளை அந்தந்தத் துறையை சார்ந்த மகளிரே வழங்கினர்.

அடுத்ததாக, இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டோடு ரமலான் மற்றும் ஈஸ்டர் விழாக்களும் சேர்ந்து முப்பெரும் விழாவாக லேக் ஹோவெல் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது. இனிப்புகளோடும் இனிய வரவேற்போடும் விழா இனிதே தொடங்கியது. நமது பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் நடனம், பாட்டு மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் அவைகளைத் தொடர்ந்து அரச பரம்பரை உடையில் ராஜா ராணிகளாக நம் செல்ல குழந்தைகளின் அணிவகுப்பு, அழகாகவும், நமது வரலாற்றை நினைவு கூர்வதாகவும் இருந்தது. தமிழ் வார்த்தைகளைக் கொண்ட பிங்கோ விளையாட்டு, பாட்டுக்குப் பாட்டு போன்ற விளையாட்டுகள் பெரியவர்கள் சிறுவர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்துவதாக இருந்தது.

ஈஸ்டர் முட்டை வேட்டை குழந்தைகள் விளையாட, சிறப்பு இரவு உணவோடு விழா இனிதே முடிவடைந்தது. நமது மக்கள் குடும்பங்களாக அங்கு ஒன்று கூடியது அனைவருக்கும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது. அடுத்து, கோடை விடுமுறையைத் தொடர்ந்து நம் தமிழ் மக்கள் அனைவரையும் இணைக்கும் மேலும் பல சிறப்பு நிகழ்ச்சிகளையும், தீபாவளி கொண்டாட்டங்களையும் எதிர்நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றோம்.

நியூ இங்கிலாந்து தமிழ்ச் சங்கம்

நகைச்சுவையும் ஆரோக்கியும்: இந்நிகழ்ச்சியில் மருத்துவர் பேராசிரியர் டாக்டர். வி.சொக்கலிங்கம் ஐயா அவர்கள் இதயத்தின் முக்கியத்துவத்தையும், இதய நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வு நகைச்சுவை கலந்த மருத்துவத் தகவல்களுடன் சுவாரசியமாகவும் பார்வையாளர்களை ஈர்க்கவும் செய்தது.

நெட்ஸ் கோடை விழா 2023: கோடைவிழாவில் கைப்பந்து, த்ரோபால், உறியடி, தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி போன்ற பல வேடிக்கையான விளையாட்டுகளை ஏற்பாடு செய்திருந்தோம். இது உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்குக்கான இலவச நிகழ்வாகும். உணவு கூட்டாஞ்சோறு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இந்நிகழ்ச்சியில், ஏராளமான குடும்பங்கள் விளையாட்டுகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சுவையான உணவை சாப்பிட்டு நேரத்தை செலவிட்டனர்.

நாளைய தமிழ் இலக்கியம் நானிலத்தில் - இலக்கியக் கருத்தரங்கம்

பேரவையின் இலக்கியக் குழு ஒவ்வொரு திங்கள் தோறும் இலக்கிய ஆளுமைகளை அழைத்து இலக்கிய கூட்டத்தினை நடத்துவது வழமையான ஒன்று. இதுவரை 2023 -24 ஆம் ஆண்டில் திரு. எஸ். ராமகிருஷ்ணன் துவங்கி திரு. பெருமாள் முருகன் அவர்கள் வரை 6 இலக்கியக் கருத்தரங்கங்களை நமது பேரவையின் இலக்கியக் குழு நடத்தியுள்ளது. அதன் நீட்சியாக, பேரவை இலக்கியக் குழு, சாக்ரமெண்டோவில் நடந்த 36-வது பேரவை விழா இணை அமர்வில், மிகச்சிறந்த இலக்கிய ஆளுமைகள் புடை சூழ "நாளைய தமிழ் இலக்கியம் நானிலத்தில்" என்ற இலக்கியக் கருத்தரங்கத்தை மிகச் சிறப்பாக நடத்தியது.

நாமநீர் வேலி சூழ் நம் முன்னோர் தோன்றிய மண் தொட்டு வந்த எம் மாபெரும் சன்றோர்கள் அன்னைத் தமிழை அடிமடியில் இட்டுக் கொண்டு நாங்கள் அள்ளிப் பருக தமிழமுதம் கொடுக்க வந்திருந்தார்கள்.

திருமிகு பிரதீபா பிரேம் (மருதயாழினி)

கற்றறிந்த ஆன்றோர்களின் கருத்துக்கள் கேட்டுக்கொள்ளும் செவிகளைச் சென்றடைந்தால் அறம் செழிக்கும், நல்லவை நடக்கும், ஏற்றுக்கொண்ட செயல்கள் ஈடேறும் என்ற ஒரு நல் நோக்கத்திலே இந்த கருத்தரங்கத்திற்குச் சான்றோர்களை அழைத்திருந்தோம்.

இலக்கியக் குழுவின் தலைவர் திரு. மணிவண்ணன் முத்து மாணிக்கம் அவர்கள் வரவேற்பு

நல்க, துணைத்தலைவர் திருமிகு பிரதீபா பிரேம் நோக்கவுரை நிகழ்த்தி நிகழ்வு தொடங்கியது.

தமிழறிஞர் முனைவர் கு.வெ.பால சுப்பிரமணியன், சொல்வேந்தர் திரு. சுகி சிவம், இலக்கியச் சுடர் திரு. தி. இராமலிங்கம், பேச்சாளர் திருமிகு பர்வின் சுல்தானா, எழுத்தாளர் திரு. இமையம், பாடலாசிரியர் திருமிகு கு. உமாதேவி, பேச்சாளர், திரைப்பட நடிகர் திரு. ஜோ மல்லூரி, கதைசொல்லி திரு. பவா செல்லத்துரை, பட்டிமன்ற பேச்சாளர் திரு. மோகன சுந்தரம் மற்றும் எழுத்தாளர் திருமிகு சைலஜா பவா செல்லத்துரை ஆகியோர் தங்களது உரையை மிகச் சிறப்பாக வழங்கினர்.

நிகழ்வில் பேரவையின் 2023-24 ஆண்டிற்கான மூன்று அருவி இதழ்களை பேரவைத் தலைவர் முனைவர் திரு. பாலா சுவாமிநாதன், அருவி இதழின் ஆசிரியர் திருமிகு இரம்யா ரவீந்திரன், துணை ஆசிரியர் திருமிகு ஷீலா ரமணன் மற்றும் அருவி மலர்க் குழு இணை ஆசிரியர்கள் திரு. ஜேசு சுந்தரமாறன், திருமிகு பிரதீபா பிரேம் ஆகியோர் இணைந்து சிறப்புப் பேச்சாளர்கள் முன்னிலையில் வெளியிட்டனர்.

நிகழ்வில் பேரவையின் புதிய முன்னெடுப்பான சென்ற ஆண்டின் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறந்த சிறு கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்த நூலை பேரவைத் தலைவர் முனைவர் திரு. பாலா சுவாமிநாதன், செயலாளர் திரு. கிங்ஸ்லி சாமுவேல் உள்ளிட்ட பேரவைத் தன்னார்வலர்கள் இலக்கிய ஆளுமைகள் புடை சூழ வெளியிட்டனர்.

இந்த நிகழ்வில் வட அமெரிக்க எழுத்தாளர்கள் ஒன்று கூடலுக்காக இணைந்த எழுத்தாளர் திரு. ஆரூர் பாஸ்கர் மற்றும் கவிஞர் திருமிகு சுபா காரைக்குடி அவர்களும் மேடையில் வட அமெரிக்க

எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி மகிழ்ந்தார்கள். மேலும் நிகழ்விற்கு நடிகர் திரு. சசிக்குமார், முன்னாள் புதுவை சபாநாயகர் திரு. சிவக்கொழுந்து மற்றும் வட அமெரிக்க எழுத்தாளர்கள் அனைவரும் வருகை புரிந்து அரங்கத்தை நிறைத்து மகிழ்ந்திருந் தனர்.

நிகழ்வு சிறப்புற உழைத்த இலக்கியக் குழுத் தலைவர் திரு. மணிவண்ணன் முத்துமாணிக்கம், எங்களுக்கு பெரும் ஒத்துழைப்பு கொடுத்த பேரவைத் தலைவர் முனைவர் பாலா சுவாமிநாதன் மற்றும் சாக்ரமெண்டோ மன்றத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. ஜான் பிரிட்டோ, இந்த நிகழ்விற்காக உழைத்த எங்கள் இலக்கியக் குழுவைச் சார்ந்த திருமிகு இரம்யா ரவீந்திரன், திரு. ஜேசு சுந்தரமாறன், திரு சுந்தரபாண்டியன் சபாபதி அவர்கள், திரு பாண்டியன் ஞானப்பிரகாசம் அவர்கள் மற்றும் திரு. விஜய் செல்வராஜ் ஆகிய அனைவருக்கும் அன்பையும் மகிழ்வையும் தெரிவித்து நன்றியுரையை திரு. பாண்டியன் ஞானப்பிரகாசம் அவர்கள் அளித்தார்.

மேலும் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்திய கவிஞர் அருள் ஜோதி, வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகப் படுத்திய எழுத்தாளர் திரு. ஆரூர் பாஸ்கர் மற்றும் திருமிகு கவிஞர் சுபா காரைக்குடி அவர்களுக்கும் நன்றி பல.

இந்த பேரவை நிகழ்வு மூலம் ஓராண்டு காலத்தை பேரவையின் இலக்கியக் குழு மிகவும் மன நிறைவுடன் நிறைவு செய்துள்துள்ளது.

ஆங்கிலத்திற்கும் தாய் நம் தமிழ்தான்

தமிழுக்கும் ஆங்கலத்திற்கும் உள்ள ஒலி ஒத்த சில சொற்கள்

Mango - மாங்காய்	Eight - "எட்"டு	Wagon - வாகனம்
Cash - காசு	Victory - வெற்றி	Elachi - ஏலக்காய்
One - "ஒன்"று	Win - வெல்/வென்று	Coir - கயிறு

தமிழ் கூறும் தலைமுறை வெற்றியாளர்கள்

தமிழ் கூறும் தலைமுறை - இளைஞர்

முதலாவது இடம்



அன்னபூரணி அமர்நாத்

இரண்டாவது இடம்



ஆல்வின் கிஷோர்

மூன்றாவது இடம்



சமிக்ஷா சரவணகுமார்

தமிழ் கூறும் தலைமுறை - சிறுவர்

முதலாவது இடம்

ஆராதனா அருண்

இரண்டாவது இடம்

ஆகர்ஷன் காண்டீபன்

மூன்றாவது இடம்

காவ்யா பாரதி

மினசோட்டாத் தமிழ்ச் சங்கம்

மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்திற்கும், மினசோட்டாவின் தமிழ்ச் சமுதாயத்திற்கும் ஏன் ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்திற்கே ஆகஸ்ட் 1 2023 அன்று ஒரு முக்கியமான மைல்கல் என்றுதான் சொல்லவேண்டும். ஆம், அன்றுதான் மினியாபோலிஸ் நகரின் மையப் பகுதியில் “Hennepin Event Center” ன் 9ஆவது தெருப்பக்கச் சுவரில், தமிழர் மரபுக் கலைகளைத் தாங்கி நிற்கும் நாற்பது அடி உயரம் முப்பது அடி அகலம் (40’ X 30’) கொண்ட பிரம்மாண்ட பதாகை நிறுவப்பட்டது. இந்த திட்டப்பணி முழுமையைக் கொண்டாடும் விதமாகக் கொண்டாட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்த தயாரிப்பின் ஒவ்வொரு நிலையும் கொண்டாடும் படியாக இருந்தது. அந்த அனுபவத்தை இந்த சிறு காணொளியில் காணலாம். அமெரிக்கத் தளங்களில், தமிழ், தமிழர் கலை மற்றும் மரபினை கொண்டு சேர்க்கும் மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்தின் பயணத்தில் இது நிச்சயமாக, ஒரு புதிய பரிமாணம் தான்.(https://www.youtube.com/watch?v=LdKO6zj6Tqg)

பல வண்ணக் கோலம் போல அமைந்த தமிழர் மரபுக் கலைகளைக் கொண்டாடும் நேர்த்தியான அதேநேரம் நுணுக்கமானதொரு நிழற்படம் அது. இத் திட்டப்பணியில் மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்தை இணைத்துக் கொண்டமைக்கு அசாத்திய திறமை கொண்ட நிழற்பட கலைஞர் R.J. கெர்ன் அவர்களுக்கு மிகுந்த நன்றிகள். R.J. அவர்களைப் பற்றிய விவரங்களை இந்த இணைய முகவரியில் காணலாம் "https://hennepintheatretrust.org/its-the-people/r-j-kern/". “It’s the People” எனும் இந்த திட்டத்தை முன்னெடுத்து இதனைச் சாத்தியப்படுத்திய “Hennepin Theatre Trust” அமைப்பிற்கு வார்த்தைகளால் நன்றி சொல்லி விட முடியாது. “Network of Mutuality” எனும் கருத்தியலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் கலைகளால் உலகை ஒன்றுபடுத்தும் எண்ணத்தை முன்னிறுத்துகிறது. இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு மினசோட்டாவிற்கு வருகை தரும் நமது விருந்தினர்களுக்குக் கொண்டு காட்டி மகிழச் சிறந்ததொரு அடையாளச் சின்னம் இருப்பது நமக்குப் பெருமைதானே! இத் திட்டம் பற்றி அறிந்துகொள்ள இவ்விணைய முகவரியைப் பாருங்கள் https://hennepintheatretrust.org/its-the-people/.

It’s the People

R. J. Kern

The Journey

நினைவில் நின்றவர்கள்

கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு அவர்கள்

2 சனவரி 1938 – 9 ஆகத்து 2023

சங்க கால கொடுமணம் (இன்றைய கொடுமணல்) ஊரைக் கண்டறிந்து, அகழாய்வு செய்து ரோமானியர்களுடன் தொடர்புடைய நொய்யல் கரை நாகரிகம் குறித்த அரிய தகவல்களை வெளிக்கொண்டு வந்த மாபெரும் கல்வெட்டு ஆய்வாளர் புலவர் செ.ராசு அவர்கள் ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே வெள்ளமுத்துக் கவுண்டன்வலசு கிராமத்தில் பிறந்தவர். இவர் பள்ளிக் கல்வியை திருப்பூர், ஈரோடு மாவட்டங்களிலும், திருப்பனந்தாள் கல்லூரியில் வித்துவான் படிப்பையும் நிறைவுசெய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.லிட் மற்றும் முதுகலைப் பட்டம் பெற்றார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கொங்கு நாட்டு வரலாற்றில் சமண சமயம் என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவர். 1959ஆம் ஆண்டில் ஈரோட்டில் தமிழாசிரியராகப் பணியைத் தொடங்கினார். பின்னர் 1980-82ல் தமிழக அரசு தொல்லியல் துறையில் பணி புரிந்தார். பிறகு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக 1982ஆம் ஆண்டில் இணைந்து கல்வெட்டு, தொல்லியல் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கல்வெட்டு, செப்பேடு, ஓலைப் பட்டயம், ஓலைச்சுவடி, இலக்கியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர். மேலும், 161 நூல்கள் மற்றும் 250 கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரச்சலூர் இசைக் கல்வெட்டைக் கண்டுபிடித்து உலகுக்கு வெளிப்படுத்தியவர். இவருடைய இழப்பு தமிழகத்திற்கும், இந்திய இலக்கிய மற்றும் வரலாற்று ஆய்வு பிரிவிற்கும் மிகப்பெரியதாகும்.

ஓவியர் மாருதி (எ) வெ. இரங்கநாதன்

28 ஆகத்து 1938 – 27 சூலை 2023



ஓவியர் மாருதி (எ) வெ. இரங்கநாதன் என்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த மிகச்சிறந்த ஓவியர் மற்றும் ஆடை வடிவமைப்பாளராக இருந்தவர். இவர் கண்மணி, பொன்மணி, விகடன், குமுதம், குங்குமம் போன்ற இதழ்களுக்கு அட்டைப்படமும், கதை கவிதைகளுக்கு ஏற்ற ஓவியங்களும் வரைந்துள்ளார். தமிழக அரசு இவருக்கு கலைமாமணி விருது தந்துள்ளது. மாருதி அவர்கள் புதுக்கோட்டையில் 1938, ஆகஸ்டு 28 அன்று டி.வெங்கோப ராவ், பத்மாவதி பாய் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர்கள் மராத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவருடைய தந்தை ஆசிரியராகப் பணி செய்தார். அதனால் வீட்டில் கிடைக்கும் சாக்பீஸைக் கொண்டு மாருதி அவர்கள் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டார். மாருதி புதுக்கோட்டையில் பள்ளியிறுதி வரை படித்துள்ளார். புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பி.யூ.சி படிப்பில் சேர்ந்தார். ஆனால் ஓவியங்களின் மீதான ஆர்வம் காரணமாக படிப்பினைப் பாதியில் நிறுத்தி விட்டார். தஞ்சாவூரைச் சேர்ந்த அரசு ஊழியரான விமலா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். மாருதி, கே. மாதவன் என்ற ஓவியரை மானசீக குருவாக எண்ணினார். திரைப்படங்களுக்கு பேனர் வரையும் ஆசையில் 1959 ஆம் ஆண்டு சென்னைக்குச் சென்றார். மைலாப்பூரில் திரைப்படங்களுக்கு பேனர் வரையும் நிறுவனத்தில் ஓவியம், பெயர் எழுதும் பணி செய்தார். சென்னையில் ஆர். நடராஜன் என்ற ஓவியரிடம் நடிகர் சிவக்குமாரும், மாருதியும் ஓவியம் கற்றார்கள். திரு. மாருதி அவர்கள் மறைந்தாலும், அவர் வரைந்த ஓவியங்களின் வழி மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

தமிழும்! நாமும்!

கவிஞர் த.ச.பிரதிபா பிரேம் (மருதயாழினி)

தமிழ்!
நமது உயிர் செல்கள் அனைத்தும்
இடையறாது சொல்லும் சொல்!
தமிழ்!
நமது குருதியின் அணுக்கள் எல்லாம்
குறைவில்லாமல் ஏந்திச் செல்லும்
மூச்சுக் காற்று!

நாவிலே நம் தமிழ் மொழி
பிறக்கும் தருணம்
ஓங்கி உயர்ந்த மலை முகடுகளில்
ஓய்வின்றி பெய்து கிடக்கும்
ஒய்யார வெண்பனிக்கிடையே
ஒரு சிறு செம்மலர்
விரியும் தருணம்!

ஆங்கே ,
பொங்கி ஓடும் ஆற்றில்
எம்பிக் குதிக்கும் மீன்களாய்
உள்ளம் உயரும் தருணம்!

கவிஞர் த.ச.பிரதிபா பிரேம்
(மருதயாழினி)

நீண்ட வேனிலில் வாடிக் கிடக்கும்
மேனியைத் தென்றல்
தீண்டும் தருணம்!

இப்படியாக,
நாளும் இந்தத் தமிழ்த்தேனை பருகியே
நாமும் வளர்க்கிறோம் இவ்வுயிரை
தமிழுக்கோர் நலிவு என்பின்
அது நமக்கானதல்லவோ?

கைகோப்போம் தமிழர்களாய்
தமிழர்களே நாவிலே
நற்றமிழை ஏந்துவோம்
நாடியில் தமிழ் மொழியை
துடிக்கச் செய்வோம்
நாடு கடந்திடினும்
நல்ல தமிழ் பேசுவோம்
நாளும் வளர்ப்போம் தமிழை
நானிலத்தில் நல் தமிழ்க் குடிகளிடையே!

எதிரொலி

36வது பேரவை விழா குறித்து விழாவில் பங்கேற்ற ஆளுமைகள் அளித்த பின்னூட்டங்களின் தொகுப்பினை இங்கே காணலாம்.

திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் திருமிகு. உமாதேவி அனுப்பிய காணொளிப் பதிவிலிருந்து: வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 36வது தமிழ் விழா இந்த ஆண்டு கலிஃபோர்னியாவின் தலைநகரம் சாக்ரமெண்டோவில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு கவியரங்கத் தலைமை ஏற்று நடத்துவதற்காக என்னை அழைத்திருந்தார்கள். வட அமெரிக்கா முழுதும் இருக்கக்கூடிய தமிழ்ச் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த விழாவினை நடத்தினார்கள். கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வினாடி வினா என்று ஐந்து வயது குழந்தை முதல் பெரியவர்கள் வரைக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார்கள். அவர்களுடைய உற்சாகத்தில் தமிழ் மீதும் தமிழ் பண்பாடு மீதும் வைத்திருக்கக் கூடிய ஆர்வத்தை என்னால் பார்க்க முடிந்தது. விருந்து உபசரிப்பு என்பது தமிழர்களுக்கே உரிய தனித்துவம். அதனை விழா நடந்த மூன்று நாட்களும் என்னால் பார்க்க முடிந்தது. குழந்தைகள் நம்முடைய தமிழ்ப் பண்பாட்டினுடைய ஆடைகளோடும், மல்லிகைப்பூ வைத்து, பொட்டு வைத்தும், அயலவர்கள் கூட வியக்கும் வண்ணம் ஒளி ஊட்டக்கூடிய இடமாகக் காட்சி அளித்தது. இத்தகைய விழாவினை வருடந்தோறும் நடத்திக் கொண்டிருக்கும் பேரவைக்கு

என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து உங்களுடைய தமிழ்ப் பணி பெருக வேண்டும், வளர வேண்டும். உங்களுடைய தமிழ்ப் பணி தான் உலகம் முழுவதும் இருக்கக் கூடிய தமிழ்ச் சங்கங்களையெல்லாம் ஒருங்கிணைந்து ஒரு அமைப்பாக இயங்கக் கூடிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. தொடர்ந்து தமிழை நீங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கு இருக்கக் கூடிய குழந்தைகளுடைய உச்சரிப்புகள் என்னை மிகவும் வியக்க வைத்து. அருவி இதழினுடைய கட்டுரைகள், கவிதைகள், கதைகள் அனைத்துமே வேறு ஒரு தளத்திற்கும், வட அமெரிக்காவில் நம் தமிழ் மொழி எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக் கிறது என்பதை காணும் படியாகவும் இருந்தது. அத்தனைப் பொறுப்பாளர்களுக்கு என்னுடைய நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கியச் சுடர் திரு. தி. இராமலிங்கம் அவர்கள் அனுப்பிய ஒலிக் குறிப்பில் இருந்து

வணக்கம். பெட்னா அமைப்பு என்பது தமிழ்நாட்டில் உள்ள இலக்கிய பேச்சாளர்களுக்கு ஒரு கனவைத் தரக் கூடிய சொல். பெட்னா நிகழ்ச்சியில் பங்கேற்பதை பெருமை வாய்ந்ததாகத் தான் இங்கே இருப்பவர்கள் நினைக்கிறார்கள். அதற்கு ஒரு சில விதி விலக்குகள் இருக்கலாம். அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் பொதுவாக பெட்னாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணம் எனக்கும் இருந்தது. அது இந்த ஆண்டு நிறைவேறியது. நான் சாக்ரமாண்டோவிற்கு வந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டது பெரிய வியப்பை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களில் உள்ள தமிழ் அன்பர்கள் இவ்வளவு அழகாக, திட்டமிட்டு, இந்த விழாவினை மூன்று நாட்கள் நடத்தியது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. இது ஒரு மாபெரும் விழா. ஒரு கல்யாணம் பண்றது கஷ்டம் அப்படின்னெல்லாம் சொல்வாங்க.கல்யாணம் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார் அப்படிங்கறது.ஆனா இது அதை விட அதிகமான திட்டமிடல், பெரிய பொருள் செலவு. அந்தப் பொருளை எப்படிச் சேர்க்கப் போகிறோம் என்பது, இத்தனை பேரை வரவழைப்பது. அப்பறம் அந்த நேர மேலாண்மை. அந்த விஷயங்களை எல்லாம் அழகா திட்டமிட்டு, அதை விட உணவு, உணவு ஏற்பாடு. இந்த முறை சிறப்பு என்னென்ன விருந்தினர் எல்லாம் தங்கியிருந்த தங்குமிடம் இரண்டும் பக்கத்து பக்கத்துல இருந்தது.அதற்கு எதிரேயே சாப்பிடற இடம் இருந்தது. அங்கிருந்து நடை தூரத்திலேயே விழா.அப்ப எல்லாமே எவ்வளவு அழகா திட்டமிட்டு அவங்க பண்ணியிருப் பாங்க அப்படிங்கறது பெரிய வியப்பா இருந்தது. அந்த மாதிரி உணவு வந்தவர்கள் அனைவருக்கும் ஏற்பாடு செய்தது, இதற்கு அடுத்து இந்த நிகழ்வு, அதற்கு அடுத்து இந்த நிகழ்வு அப்படிங்கறது. யாராவது இந்த நிகழ்வுல பங்குபெற்றவங்க நேரக் கட்டுப்பாடு இல்லாம தங்கள் நிகழ்ச்சியை கொண்டு போனாங் கன்னா அதைப் பார்க்கத் தான் வருத்தமா இருந்தது. தமிழுக்காக தான் பண்றோம்னா நிகழ்ச்சி நடத்தறவங்களும் தமிழுக்காகத் தானே பண்றாங்க. எல்லாரும் தமிழுக்கத் தான் பண்றோம். ஆனா நேரக் கட்டுப்பாடு என்பது ரொம்ப முக்கியம். அதை மீறினச் செயல் யாராவது செய்திருந்தா அது தான் வருத்தத்திற்கு உரியது. ஆனா மற்றபடி நல்லாச் சிறப்பா நடந்தது. அதில் எனக்கு தமிழரங்கம் நிகழ்ச்சியில் பேசக் கூடிய வாய்ப்பு, 7 நிமிடம் தான் கொடுத்தாங்க . அது ரொம்ப குறைவுன்னு எனக்குத் தெரியும். ஆனா வேற வழி இல்லை. அதனால நான் மகிழ்ச்சியோடு அதில் பேசினேன். அதே மாதிரி இலக்கிய கருத்தரங்கமா நடத்திய நிகழ்ச்சி ஒரு சிறு அறையில் நடந்தாலும் அரங்கம் நிறைந்திருந்தது. பேசக் கூடிய நேரம் குறைவா இருந்தாலும் கூட ஒரு நிறைவான பேச்சா இருந்தது. வந்தவங்க அவ்ளோ ரசிச்சாங்க. அப்ப மொத்தமா பார்த்தோம்னா, ஒருவேளை நேரம் ரொம்ப அதிகமா போனது, அந்த மாதிரியான ஒரு சில குறைகள் சிலருக்கு இருந்தாக் கூட ஒரு

பெரிய வெற்றி விழான்னு தான் சொல்லணும். இந்த ஏற்பாட்டாளர்கள், பொறுப் பாளர்கள், இந்த ஏற்பாட்டில் கலந்து கொண்டு தங்களுடைய பங்களிப்பை செய்தவர்கள், எத்தனை முறை ஏர்போட்டுக்கு போய் வந்து , போய் வந்து அவங்களை எல்லாம் ரிஸீவ் பண்ணி,அவர்களையெல்லாம் சென்ட் ஆப் பண்ணி, அவ்வளவு அழகா செய்தாங்க. அது பெரிய மகிழ்ச்சி. இந்த முயற்சி ஒவ்வொரு ஆண்டும் தொடரணும்.உண்மையாக தமிழுக்கும் இலக்கியத்திற்கும் ஆர்வத்தோடு இருக்கற இன்னும் பலருக்கு இந்த வாய்ப்பு கிடைத்தால் எல்லோரும் மகிழ்ச்சி அடைவாங்க. இந்த முறை வந்தது எனக்கு பெரிய மகிழ்ச்சி. இதற்கு காரணமான எல்லோருக்கும் என்னுடைய நன்றிகளும், வணக்கமும்.

தோல்பாவை கூத்துக் கலைஞர் திரு. முத்துச்சந்திரன் அனுப்பிய ஒலிக்குறிப்பில் இருந்து

மிகமிக அருமை. எங்களை ரொம்ப நல்லா கவனிச்சிக்கிட்டிங்க. உங்கள் உள்ளங்கைகளில் வைத்து எங்களைப் பார்த்தது போன்று மிக அருமையாக எங்களை வழி நடத்தினீர்கள். அதே போல சாக்ரமெண்டோ தமிழ்ச் சங்கத்தில் உள்ள அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம்.ஏனென்றால் அருமையான நிகழ்வு. மிக நன்றாக செய்திருந்தீர்கள். அனைவரையும் வரவழைத்து, அனைவருக்கும் ரொம்ப நல்ல ஒத்துழைப்பு தந்தும், விடிய விடிய முழித்திருந்தும் தூங்காமலும் மிக அருமையாக செய்திருந்தீர்கள். அது எனக்கு பிடித்திருந்தது. எங்களுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறோம் . எங்களை மிக அருமையாக கவனித்து நல்ல முறை யில் எங்களை வழி அனுப்பினீர்கள். மேலும் மேலும் இந்தச் சங்கம் மிகச் சிறப்பாக நடக்க வேண்டும். மிக அருமையாக இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் ஆசை.

குறிப்பு:காணொளிச் செய்தி மற்றும் ஒலிக்குறிப்புகளில் புரிதலுக்காக சின்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் மாற்றம் செய்யப் படாமல் அப்படியே கொடுக்கப் பட்டிருக்கிறது.

மருத்துவர் திரு. சோம. இளங்கோவன்

பேரன்புப் பேரவைத் தலைவர் மற்றும் விழாக் குழுவினர் அனைவர்க்கும் இதயங்கனிந்த வாழ்த்துகள், பாராட்டுகள். மிக்க மகிழ்ச்சியான பல உணர்வுகள் பொங்கிய விழா. உழைத்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக. தொன்மையும் சிறப்பும் நன்றாக வெளிப்படுத்திய விழா. ஒவ்வொன்றையும் யாராவது விரிவாக எழுதுவார்கள் என்று நினைக்கின்றேன்.

தமிழர்கள் இன்று உயர்ந்து நிற்பது பல நிகழ்ச்சிகளில் வெளிப்படுத்தப் பட்டது.இளைய தலைமுறையின் பங்கேற்பு பாராட்டப்பட வேண் டிய சாதனை. பேச்சாளர்களும் கருத்தாழமும், சிந்தனைகளும் காலத்திற் கேற்ப அமைந்திருந்தது. தமிழ்நாட்டு முதல்வரின் பேச்சும் இன்றைய நிலை ஒட்டி வெளிநாடு வாழ் தமிழர்களின் மனமகிழ்ச்சி உழைப்பைப் பாராட்டும் உரை.

மரபு கலைஞர்களை அனுப்பிச் சிறப்பித்தது பலருக்கும் பெருமை தந்தது. உணவு மிகவும் மிகுதி, ஆனால் அருமை அருமை! எப்போதும் போல் குறைகள் உண்டு. நிறைய நிகழ்வுகள். மற்ற குறைகள்.

ஆனால், பேரவையின் வளர்ச்சியும் இளையோர் பங்களிப்பும் மனதிற்குப் பெரு மகிழ்ச்சியளித்தது. வாழ்த்துகள்.

வாழ்த்துவோம் வாரீர்!!!

சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஆளுமைகளுக்கு வாழ்த்துகள்

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த இலக்கியப் படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றுக்கான விருதுகள் சாகித்ய அகாதெமி சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த (2023) ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. பால சாகித்ய புரஸ்கார் விருது 'ஆதனின் பொம்மை' என்ற நாவலுக்காக திரு உதய சங்கருக்கும், யுவ புரஸ்கார் விருது 'திருக்கார்த்தியல்' என்ற சிறு கதைக்காக திரு ராம் தங்கம் என்பவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பால புரஸ்கார் விருது சிறார் இலக்கியத்துக்காக வழங்கப்படுகிறது. விருது பெற்ற படைப்பாளிகள் இருவருக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

கிழிந்த தோலைத் தைத்த சங்கத் தமிழன்

இக்காலத்தில் வெட்டப்பட்ட இடத்தைத் ஊசி கொண்டு தைக்கும் முறை மருத்துவத்துறையில் பரவலாகக் காணப்படுகிறது. அக்காலத்தில் காயங்களை தைக்க பயன்பட்ட ஊசிக்கு "நெடு வெள்ளூசி" என்று பெயர்.

"மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்

சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி

நெடுவசி பரந்த ...."

(பதிற்றுபத்து - 42)

காயம்பட்ட இடத்தில் ஊசி கொண்டு தைப்பது என்பது, நீர் நிறைந்த தடாகத்தில் வாழும் மீனானது நீரிலிருந்து துள்ளி எழுந்து மீண்டும் நீருக்குள் செல்வது என்ற பாடல் மூலமாக அறிய முடிகிறது.

சிகாகோ தமிழ்ச் சங்கம்

ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வரும் சிகாகோ தமிழ்ச் சங்கம் கடந்த ஜூன் மாதம் 17 ஆம் தேதி விளையாட்டு நாள் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் மேசைப் பந்தாட்டம் (பிங்பாங்), சதுரங்கம் (செஸ்), பூப்பந்தாட்டம் (பாட்மிட்டன்) ஆகிய மூன்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. பெரியவர் முதல் சிறியவர் வரை நூற்றுக்கும் மேற்பட்ட சிகாகோ வாழ்த் தமிழர்கள் இதில் பங்கேற்றுப் பரிசுகளை வென்றனர்.

சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் ஜூலை மாத நிகழ்வாக இலக்கிய மாலை நிகழ்ச்சி வெள்ளி மாலை 7ஆம் தேதி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தனது கதை மாந்தர்கள் மற்றும் கதைக்களங்கள் பற்றிச் சாகித்ய அகாதெமி விருது மற்றும் குவெம்பு ராஷ்ட்ரிய புரஸ்கார் தேசிய விருது பெற்ற எழுத்தாளர் திரு.இமையம் அவர்கள் கலந்துரையாடினார். அருமை எழுத்தாளருடன், செய்தியாளர் திருசெந்தில்வேல் அவர்களும் பங்கேற்று பல்வேறு இலக்கியக் களங்கள் பற்றிப் பேசினார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒப்பற்ற நோக்கில் சிகாகோ தமிழர்கள் ஒன்றுகூடும் கோடை விழா "உவகை". இந்த ஆண்டு உவகை விழா ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. நானூறுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொந்தங்கள் கலந்து கொண்ட இவ்விழா பாரம்பரிய உணவு, கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என வெகுச் சிறப்பாய் நடந்தது.

சிகாகோ தமிழ்ச் சங்கம் அடுத்து முன்னெடுக்கும் பெருநிகழ்வு 5 ஆவது உலகத்திருக்குறள் மாநாடு. 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடக்க இருக்கும் இம்மாநாட்டினை ஆசியவியல் நிறுவனம் மற்றும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் அமெரிக்க கிளையுடன் இணைந்து நடத்தவுள்ளது. இம்மாநாட்டின் பொருண்மை "திருக்குறள் உலகப் பொதுமறை " என்பதாகும். இம்மாநாட்டின் வாயிலாக அமெரிக்காவில் இயங்கி வரும் பல்வேறு ஆய்வாளர்களையும் இளம் மாணவர்களையும் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும்

ஆய்வாளர்களையும் ஒருங்கிணைத்து திருக்குறளின் பெருமையை உலகிற்குப் பறைசாற்ற பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைப் பெறவுள்ளோம். மாநாட்டுக் கட்டுரைகள் உலகத் தமிழர்க்கும் பல்வேறு மொழி, இன ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டியாக அமைவதுடன் திருக்குறளை உலகப்பொது நூலாக ஏற்றுக்கொள்ள வழிவகை செய்யும். சிகாகோவில் நடைபெறும் இம் மாநாட்டிற்கு அனைத்து தமிழ்ச் சங்கங்களும் தங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

திருக்குறள் மாநாட்டிற்கு பதிவு செய்ய கீழ்க் கண்ட இணைப்பைச் சொடுக்கவும்.

https://thirukkural-conf.paperform.co

INSTITUTE OF ASIAN STUDIES

சிகாகோ தமிழ்ச் சங்கம்
ஆசியவியல் நிறுவனம் (சென்னை)
உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (அமெரிக்கா)

இணைந்து நடத்தும்

5ஆவது உலகத் திருக்குறள் மாநாடு

சிகாகோ - ஏப்ரல் - 2024

International Conference on Thirukkural - 2024

நம் சிகாகோ நகரில் நடைபெற உள்ள 5ஆவது உலகத் திருக்குறள் மாநாட்டிற்கு தங்களின் பேராதரவை அன்புடன் வேண்டுகிறோம்.

http://www.chicagotamilsangam.org | www.instituteofasianstudies.com | www.thirukkuralconference.org

contact@thirukkuralconference.org | /ChicagoTamilSangam

வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் - பகுதி 3

பெயர்: திருமிகு ராஜி வாஞ்சி

பிறந்த ஊர்: புதுக்கோட்டை

வசிக்கும் ஊர்: ஹூஸ்டன், அமெரிக்கா

பணி/தொழில்: அலுவலக நிர்வாகி

மகாகவி ஈரோடு தமிழன்பன் 80 விருது மற்றும் வெளிநாடு வாழ் பெண் கல்பனா சாவ்லா விருது பெற்றுள்ள வாஞ்சி சங்க இலக்கியப் பாடல்களை எளிய புதுக்கவிதை வடிவிலும் சிறுகதைகளாகவும் எழுதி வருகிறார். அவ்வப் போது பழைய ஆங்கிலக் கவிதைகளை மொழிபெயர்ப்பும் செய்து வருகிறார். சங்க இலக்கியங்களில் பெரும் ஆர்வம் கொண்டு " குறிஞ்சி பூத்த வேலி" – முதல் 25 குறுந்தொகைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட புதுக் கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியிட உள்ளார். மிக விரைவில், வாஞ்சியும் மற்றுமொரு தமிழ்நாட்டைச் சேர்ந்த மூத்த கவிஞரும் இணைந்து எழுதிய, அமெரிக்கப் பூர்வகுடிகள் பற்றிய வரலாற்றுக் கவிதை மற்றும் கட்டுரைத் தொகுப்பு , தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருமொழி நூலாக வெளியாக உள்ளது.

எழுதிய நூல்கள்:

" நீளிடைக் கங்குல்" - சங்ககாலமும் சமகாலமும் (கட்டுரை) 2021 படைப்பு பதிப்பகம். வெளியீடு- மார்ச் 7,2021. இவர் கவிதைகள் பல இதழ்கள், தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன

பெயர்: திருமிகு த.ச. பிரதிபா பிரேம் (மருதயாழினி)

பிறந்த ஊர்: தஞ்சை

வசிக்கும் ஊர்: அட்லாண்டா, அமெரிக்கா

பணி/தொழில்: கணினி மென்பொருள்

பத்து ஆண்டுகளுக்கு மேலாக அட்லாண்டாவில் வெளி வரும் வசந்த மலர் இதழில் ஆசிரியர் குழுவில் இடம்பெற்று கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதி வருகிறார். தமிழகத்தின் முன்னணி பத்திரிகைகளில் இவரது படைப்புகள் வெளி வந்துள்ளன. தமிழ்க்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் ஒப்பாரும் மிக்கரும் இல்லாப் பல சான்றோர்களின் மத்தியில்,சிறு பிள்ளையாய் கரையோரம் வரும் தமிழ் அலையில் கால் நனைத்து விளையாடிக் கொண்டிருக்கும் சிறு பிள்ளை என தன்னைச் சொல்லும் அவர், அறியாத அனைத்தையும் அறிந்துக் கொள்ள நூல்களின் தோழியாக இருக்கிறார். 36வது பேரவையின் விழாவில் அமெரிக்காவின் ஆற்றல் மிகுப் பெண்கள் -2023 விருது மற்றும் தமிழன்பன் 80 விருது-2022 ம் பெற்றுள்ளார்.

எழுதிய நூல்கள்:

1. ஆழியிலே அமிழ்ந்த என் அழகிய மரப்பாச்சி
2. கற்பனைச் சிறகினிலே
3. என் நெடும்பயணக் காட்டினிலே
4. என் நினைவுக் குடுவையினிலே

பெயர்: திரு. ஆரூர் பாஸ்கர்

பிறந்த ஊர் : திருவாரூர்

வசிப்பது: ஃப்ளாரிடா மாகாணம்

பணி: மென்பொருள் துறை

பணி நிமித்தமாக மலேசியா, ஜெர்மனி, சுவீடன் போன்ற கிழக்காசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த அனுபவம் உள்ள இவர் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என தொடர்ச்சியாக எழுதி வருகிறார். தமிழில் அதிகம் எழுதப்படாத களங்களைத் தனது கதைக்களமாக தேர்வு செய்து எழுதிவரும் இவருடைய இர்மா, வனநாயகன் போன்ற நூல்கள் பரவலான கவனத்தைப் பெற்றன. சமீபத்தில் வட அமெரிக்கப் பேரவை நடத்திய "அமெரிக்கக் கதைகள்-2022 சிறுகதைப் போட்டி" யில் இவருடைய 'நீட்டலும் மழித்தலும்' சிறுகதை ஐந்து சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகத் தேர்வாகி பரிசு பெற்றது.

எழுதிய நூல்கள்:

பங்களா கொட்டா நாவல்

வனநாயகன் - மலேசிய நாட்கள்

இர்மா - அந்த ஆறு நாட்கள்

அறத்துக்கு அப்பால் நீளும் அத்துமீறல் - சமூக ஊடகங்களும் இடைவெளிகளும்

சோஷியல் மீடியா இது நம்ம பேட்டை

ஜெஸி (எ) ஜெஸிகா கிங்

பெயர்: திருமதி. பிரியா பாஸ்கரன்

பிறந்த ஊர் : காஞ்சிபுரம்

வசிப்பது: மிச்சிகன் மாகாணம்

பணி: பொது நிறுவனமொன்றில் மேலாளர்

கடந்த மூன்று வருடங்களாகக் கவிதைகள் (மரபுக் கவிதை, புதுக் கவிதை, நவீனம், ஐக்கூ, சென்றியூ), கட்டுரைகள், நூல் அறிமுகம், ஆகியவற்றைத் தொடர்ந்து பல இதழ்களில் எழுதிக்கொண்டு வருகிறார். மரபுக் கவிதைகளின் மேலுள்ள ஈடுபாட்டால் வெண்பா பயிற்சிப் பட்டறை நடத்துகிறார். இவர் எழுதிய கவிதைகள் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தின் முன்னணி பத்திரிகைகளில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன. சேலம் தமிழ் இலக்கியப் பேரவையில் பாரதியார் விருதும், படைப்பு குழுமத்தின் சிறந்த படைப்பாளி விருதும், தமிழால் இணைவோம் உலகத் தமிழ் களத்தின் தங்கமங்கை விருதும் பெற்றுள்ளார்.

எழுதிய நூல்கள்:

நினைவில் துடிக்கும் இதயம்

காற்றின் மீதொரு நடனம்

சலனமின்றி மிதக்கும் இறகு

Horizon Of Proximity (ராமகிருஷ்ணன் அவர்கள் மூலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தொகுப்பு டிஸ்கவரி புக் பதிப்பகத்தின் மூலம் வெளி வந்துள்ளது.)

பெயர்: திருமதி. சுபா காரைக்குடி

பிறந்த ஊர் : காரைக்குடி
வசிப்பது: சௌத் பர்ன்ஸ்விக், நியூ ஜெர்சி
பணி: மென் பொருள் மேலாளர்

தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரை ஆர்வத்தோடு படித்து வரும் இவர் வலைத்தளங்களில் பல வருடங்களாக கவிதைகள், கட்டுரைகள் எழுதி வருகிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன் விருது பெற்றிருக்கிறார். வல்லினச் சிறகுகள், கொக்கரக்கோ போன்ற பல மின்னிதழ்களில் இவருடைய கவிதைகள் வெளி வந்துள்ளன. பல்வேறு ஆளுமைகளின் தலைமையில் பல கவியரங்கில் பங்கேற்றுள்ளார்.வட அமெரிக்கத் தமிழ்ப் பேரவையின் சிறுகதை போட்டியில் ஊக்கப் பரிசு பெற்றுள்ளார்.

எழுதிய நூல்:

தேடலில் தொலைந்த வெயில்

பெயர்: திரு. மீ.மணிகண்டன்

பிறந்த ஊர் : கல்லல், சிவகங்கை மாவட்டம்
வசிப்பது: ஆஸ்டின், டெக்சாஸ்
பணி: கணினித்துறையில்

தாய்மொழி தமிழின்பால் அன்புகொண்டும் ஆசைக் கொண்டும் தொடர்ந்து படிக்கவும் எழுதவும் செய்துவருகிறார். படைப்புகள் பாக்யா, ஆனந்தவிகடன், ஆனந்தசந்திரிகை இதழ்களில் வெளிவந்துள்ளன. இவரது கதைகள், கவிதைகள் பல பரிசுகள் பெற்றுள்ளன. 2023 சாக்ரமெண்டோ பேரவை விழாவில் வணக்கம் வட அமெரிக்கா குழு நடத்திய சிறுகதைப் போட்டியில் தேசிய அளவிலான முதற்பரிசு பெற்றுள்ளார்.

எழுதிய நூல்கள்:

குடைக்குள் கங்கா
ஊதாப்பூ தேசம்

பெயர்: திரு.வாஞ்சி கோவிந்த் (வாஞ்சிநாதன் கோவிந்தராஜன்)

பிறந்த ஊர்: திருமயம், புதுக்கோட்டை
வசிக்கும் ஊர்: ஹூஸ்டன், அமெரிக்கா
பணி/தொழில்: கணினி மென்பொருள்

சிவகாசி மண்ணில் பிறந்து கந்தகத்தை கைகளிலும், கம்பனைத் தலையிலும், குறுந்தொகையை நெஞ்சிலும் சுமந்து வாழ்ந்தவர் இவரது தந்தை. குழந்தைப் பருவம் முதல் தாய்ப்பாலுக்கு இணையாக தமிழ்ப் பாக்களை ஊட்டி வளர்த்த அவரது செல்லப்பிள்ளையான வாஞ்சி கோவிந்த் இதுவரை குறுந்தொகையில் முதல் நூற்றைம்பது பாடல்களையும் கம்ப இராமாயணத்தில் முதல் முன்னூறு பாடல்களையும் இன்றைய தமிழ்ச் சமுதாயம் படித்து ரசிக்கும் வண்ணம் எளிய தமிழில் எழுதியுள்ளார். திருக்குறளில் உள்ள இன்பத்துப்பால் குறள்களை புதுக்கவிதை வடிவத்தில் எழுதி, நூலாக்கத்தை விரைவில் எதிர் நோக்கியுள்ளது.

எழுதிய நூல்கள்: 1.செம்புலப் பெயல்நீர்

2. கவியுலகப் பூஞ்சோலை முகநூல் குழுமம் வெளியிட்ட 10 கவிதைத் தொகுப்பு நூல்களில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

36வது பேரவை விழா நினைவலைகள்

36வது பேரவை விழா நினைவலைகள்

36வது பேரவை விழா நினைவலைகள்